# திருமறைத்தீபம்

**BIBLE LAMP**

மலர் 2 | ஒக்டோபர் - டிசம்பர் 1996 | இதழ் 4


## வேண்டுகோள்

வேதபூர்வமான கிறிஸ்தவத்தின் வளர்ச்சியை மட்டுமே நோக்கமாகக் கொண்டுழைக்கும் திருமறைத்தீபத்தை ஆர்வமுள்ளவர்களுக்கு அறிமுகப்படுத்தும்படியாக அன்புடன் வேண்டிக் கொள்கிறோம். மேலும் பிரதிகள் தேவையானோர் எமக்கு நேரடியாக எழுதிப் பெற்றுக் கொள்ளளாம்.

## இந்த இதழில்


- திருச்சபை
- தூய வாழ்க்கை
- சுய வெறுப்பு
- கிறிஸ்தவக் கோட்பாடுகள்
- பரிசுத்த ஆவி . . .
- வில்லியம் கேரி
- புத்தக விமர்சனம்
- கேள்வி? - பதில்!
- எண்ணங்கள்


## பழையன கழிந்து . .

இவ்விதழுடன் திருமறைத்தீபம் இரண்டாம் ஆண்டை நிறைவு செய்கிறது. இரண்டு ஆண்டுகள் உருண்டோடிய சுவடே தெரியவில்லை. இந்த இரண்டு ஆண்டுகளில் தான் எத்தனை நல்லிதயம் கொண்ட நண்பர்கள், அருமை வாசகர்களின் அன்பை திருமறைத்தீபம் சம்பாதித்துக் கொண்டுள்ளது. பத்திரிகையின் கருத்துக்கள், போதனைகளுக்கு என்ன வரவேற்பிருக்குமோ என்று ஆரம்பத்தில் நாம் சந்தேகித்த போதும் அச்சந்தேகங்கள் அர்த்தமற்றவை என்பதை வாசகர்கள் உணர்த்தி விட்டார்கள். பத்துப் பேராவது பலனடைந்தால் போதும் என்று எண்ணிய எம்மைப் பெரிதும் தாழ்த்தி விட்டார் பரமன் இயேசு. கடிதங்கள் மூலம் தாம் அடைந்த ஆசிர்வாதங்களைப் பகிர்ந்து கொண்டு எம்மையும் ஊக்குவித்து வரும் வாசகர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும் பலர் கடிதமெழுத வசதியில்லாத நிலையில் எமக்காக ஜெபித்து வருவதும் நாம் அறிந்ததே. முடிந்தவரை உங்களனைவரோடும் தொடர்பு கொள்ள எம்மை அனுமதித்த தேவனுக்கு நாம் நன்றி கூறுகிறோம்.

இவ்விதழின் ஆக்கங்கள் பல, பரிசுத்த வாழ்க்கையின் அவசியத்தைக் குறித்ததாக அமைந்துள்ளன. வெறும் கொள்கைகளும், கோட்பாடுகளும் மட்டும் நமது வாழ்க்கையில் சீர்திருத்தத்தை ஏற்படுத்திவிட முடியாது. கர்த்தரை மகிமைப்படுத்தும் வகையில் பரிசுத்தமாக நம் வாழ்க்கை அமையாவிட்டால் நமது வாழ்க்கையே வீண். இவ்வாக்கங்களின் மூலம் தேவன் தாமே நம்மோடு பேசுவாராக. அவர் பரிசுத்தமாக இருப்பதுபோல் நாமும் தொடர்ந்து பரிசுத்தமாக வாழ அவர் துணை புரிவாராக.

வரப்போகும் புதிய வருடத்தில் எமது ஐக்கியத்தையும், அன்பையும் பெலப்படுத்தி தேவ கிருபை நம்மில் பூரணமாக செயல்பட கர்த்தர் நம்மை ஆசீர்வதிப்பாராக. தொல்லைகள், துன்பங்களுக்கு மத்தியில் வாழ்ந்து கொண் டிருக்கும் அன்பு சகோதரர்களுக்கு புதிய வருடம் புது வாழ்வு தரும் என எதிர்பார்ப்போம்.

அன்புடன்,
ஆசிரியர்

திருமறைத்தீபம்
BIBLE LAMP

ISSN 1173-7255

ஒக்டோபர் - டிசம்பர் 1996

இதழ் 4

ஆசிரியர்: ஆர். பாலா
Phone & Fax: + 64 9 527 1522

வெளியிடுவோர்:
சவரின் கிறேஸ் வெளியீடுகள்
Sovereign Grace Publications
த. பெ. எண் 62-159
சில்வியா பார்க்
ஆக்லாந்து
நியூசிலாந்து

ஆசிரியருக்கான கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
Bible Lamp
P. O. Box 62-159
Sylvia Park
Auckland
New Zealand

காலாண்டுப் பத்திரிகையான திருமறைத்தீபம் ஓர் இலவச வெளியீடு.

பத்திரிகையின் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.

# கர்த்தர் கட்டியெழுப்பும் சபை

திருச்சபை அமைய வேண்டிய முறை பற்றிய முக்கிய அம்சங்களைத் தொடர்ந்து ஆராய்ந்து வருகிறோம். கடந்த இதழ் திருச்சபைகள் கொண்டிருக்க வேண்டிய விசுவாச அறிக்கை பற்றி விளக்கியது. இவ்விதழில் இன்று சிலரால் பிரச்சனைக்குரியதாகக் கருதப்படும் ஒரு அம்சத்தை ஆராயவிருக்கிறோம். அதாவது திருச்சபையில் பெண்களின் பங்கு என்ன; அதுகுறித்து திருமறை என்ன கூறுகிறது என்பதை இவ்விதழில் பார்க்கப் போகிறோம். கடந்த வருடத்தில் இங்கிலாந்தில் ஆங்கிலிக்கன் சமயக்கிளை பெண்கள் திருச்சபையில் போதகர்களாகப் பணி புரிய அனுமதியளித்தன. இதை எதிர்த்த நூற்றுக்கணக்கான சபைத்தலைவர்கள் அச்சமயக்கிளையை விட்டு விலகினார்கள். ஆனால் அவர்கள் போய்ச் சேர்ந்த இடமோ ரோமன் கத்தோலிக்க சபை. கலங்கிய குட்டையில் மீன்பிடிப்பது போல் ரோமன் கத்தோலிக்க சபை இச்சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன்படுத்திக் கொண்டது. ஆங்கிலிக்கன் சபை இன்று எந்நிலைமையில் உள்ளது என்பதை இது எடுத்துக் காட்டுகிறது. இத்தகைய குழப்ப சூழ்நிலை ஆங்கிலிக்கன் சபையை மட்டுமல்லாது அனைத்து சமயக்கிளைகளையுமே (Mainline Churches) சூழ்ந்திருப்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

திருச்சபையில் பெண்களின் பங்கு என்ன என்று ஆராய முற்படும் போதே சிலர் ஏன் இந்தப் பிரச்சனை, வேறு காரியத்தைக் குறித்து எழுதக் கூடாதா என்று எண்ணலாம். ஆனால் பவுல் அப்போஸ்தலன் திருச்சபையில் பெண்களின் பங்கைக்குறித்து எழுதும் போது இவ்வாறு எண்ணவில்லை. பவுல் இதை வெறுமனே பெண்கள் பற்றிய காரியமாகக் கருதாது கர்த்தரின் படைப்பு சம்பந்தப்பட்ட காரியமாகக் கருதினார். அதாவது பெண்கள் சம்பந்தமான திருமறைக்கு எதிரான எந்தவித நடவடிக்கையும் கர்த்தரின் வார்த்தைக்கும், அவரது அதிகாரத்திற்கும், படைப்பிற்கும் முரணான காரியமாகக் கருதினார். பவுலைப் பொறுத்தவரையில் கர்த்தர் இதைக்குறித்து வேதத்தில் தெளிவாக விளக்கியுள்ளார். அதைப்புரிந்து கொள்ளாத நாம்தான் நமது இனம், பண்பாடு, நாட்டு நடப்பு என்றெல்லாம் சிந்தித்து உலகப்பிரகாரமாக நடந்துவருகிறோம். ஆகவே திருச்சபையில் பெண்களின் பங்கைக் குறித்து வேதம் தெளிவாகப் போதிப்பதால் அதை நாம் பிரச்சனைக்குரியதாகக் கருதாது திருமறை அதைக்குறித்து என்ன சொல்கிறது என்று ஆராய வேண்டும்.

நவீன பெண் உரிமை சார்பான இறையியலாளர்கள் (Modern Feminist Theologians) திருச்சபைகளில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பினாலும், கலாச்சாரப் பாரம்பரியத்தால் பெண்களை அடிமைத்தனத்தோடு நடத்துபவர்களாலும் இன்று இது ஒரு பெரிய பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. ஆகவே, ஆரம்பத்திலேயே நாம் பெண்களைக்குறித்து நிலவிவரும் சில தப்பபிப்பிராயங்களைக் களைந்து விடுவது நல்லது.


1. வேதம் ஆன்மீக வாழ்க்கையைப் பொறுத்தவரையில் கர்த்தருக்கு முன் ஆணும் பெண்ணும் சமமானவர்கள் என்று போதிக்கின்றது. இரட்சிப்பை அடைவதற்கு ஆணுக்கு ஒரு வழி, பெண்ணுக்கு ஒரு வழி என்று வேதம் போதிப்பதில்லை. ஆணும் பெண்ணும் ஒரேவிதத்தில்தான் தேவனை அறிந்து கொள்ள முடியும். வேதம் பெண்களை இரண்டாந்தரப் பிரஜைகளாகக் கருதவில்லை. அது மட்டுமல்லாது எவ்வித பாகுபாடு மில்லாது தேவ ஆசீர்வாதங்களையும் இருவரும் சரிசமமாகப் பெற்றுக் கொள்கிறார்கள். பரிசுத்த வாழ்க்கையை வாழ்வதிலும் அவர்கள் ஒருவருக்கொருவர் தாழ்ந்தவர்கள் அல்லர். இருவருமே பரிசுத்த வாழ்க்கையை வாழ்வதற்காக அழைக்கப்படுகிறார்கள். அதற்குரிய அனைத்துத் தகுதிகளையும் இருசாராருமே பெற்றுக் கொள்கிறார்கள். கலாத்தியர் நிருபத்தில் இதைத்தான் பவுல் வலியுறுத்துகிறார் (கலா. 3:28) சிலர் இவ்வேதப்பகுதியைத் தவறாகப்புரிந்து கொண்டு கடவுளுக்கு முன் ஆண், பெண் என்ற பேதம் இல்லை என்று போதிக்கிறார்கள். ஆனால் பவுலோ இரட்சிப்பைப் பொறுத்தவரையில் கடவுளுக்கு முன் ஆண், பெண் என்ற பேதமில்லை என்றுதான் போதிக்கிறாரே தவிர, ஆண், பெண் என்ற பாகுபாடோ அல்லது படைப்பின் போது கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்த பொறுப்புகளோ அகற்றப் பட்டு விட்டது என்று போதிக்கவில்லை.

2. வேதம் பெண்கள் கர்த்தரின் ஆசீர்வாதத்தோடு பலவிதத்தில் பணிபுரிந்ததையும் எடுத்துக் காட்டுகிறது. பழைய ஏற்பாட்டில் பெண்களின் அற்புதமான சாட்சியுள்ள வாழ்க்கையைக் குறித்த பல உதாரணங்களைப் பார்க்கிறோம். புதிய ஏற்பாட்டிலும் இதே வகையில் பெண்களின் சாட்சியுள்ள வாழ்க்கையைக் குறித்து வாசிக்கிறோம் (2 தீமோ. 1:5; மாற்கு 12: 713; லூக்கா 8:3; அப். 18:24-26;). அத்தோடு பழைய, புதிய ஏற்பாடுகளில் பெண்கள் கர்த்தரால் பலவிதமான பணிகளில் பயன்படுத்தப்பட்டுள்ளதையும் காணலாம்.

ஆகவே ஆணும், பெண்ணும் வேதத்தில் ஆன்மீக வாழ்க்கையைப் பொறுத்தளவில் சமமாகவே சித்தரிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் இப்படிச் சொல்லிவிடுவதால் மட்டும் பிரச்சனை தீர்ந்து விடாது. நாம் கேட்க வேண்டிய கேள்வி ஆணையும், பெண்ணையும் கடவுள் ஒரே விதமாகப் படைத்தாரா? ஆன்மீக வாழ்வில் சரிசமமான அனுபவங்களைப் பெற்றபோதும், அவர்கள் எந்தவித வேறுபாடுமில்லாமல் எங்கும் எல்லாப் பணிகளையும் சரிசமமாகச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்த்தாரா? என்பது தான். இக் கேள்விகளை வேதத்தின் அடிப்படையில் ஆராயும்போது ஆண், பெண் இருவரையும் கடவுள் எவ்வாறு படைத்தார், எத்தகைய பொறுப்புக்களை ஏற்கப் படைத்தார் என்று தெளிவாகப் புரிந்து கொள்ள முடியும். அதைப்புரிந்து கொண்டால் மட்டுமே இப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதோடு நடைமுறையிலும் திருமறை பூர்வமான வழக்கத்தை ஏற்படுத்த முடியும்.

**கர்த்தர் இவ்வுலகில் கட்டியெழுப்பிக் கொண்டிருக்கும் திருச்சபையை, இன்று என்றுமே இல்லாத அளவிற்குப் பேராபத்து சூழ்ந்துள்ளது. இந்தப் பேராபத்து திருச்சபையை தீவிரத்தோடு அழித்தொழிப்பதாக இல்லாமல், அதை ஒரு பொருட்டாகக் கருதாமல், அலட்சியப் படுத்துவதாக அமைந்துள்ளது. திருச்சபைக்கும், அது பற்றித் திருமறை தரும் போதனைக்கும் இன்று எங்கும் மதிப்பில்லை. திருமறையை அலட்சியம் செய்து, திருச்சபை என்ற பெயரில் தேவக் கூத்துகள் நடத்துபவர்களும், திருச்சபையே தேவையில்லை என்று ஆணவத்தோடு அலைபவர்களுமே இன்று அவனியிலே பவனி வருகிறார்கள். திருமறை தெளிவோடு போதிக்கும், கர்த்தரின் அன்புக்குப் பாத்திரமான திருச்சபையைப் பற்றிய திருமறையின் போதனையை இத்தொடர்கட்டுரை அலசுகிறது.**

**- ஆசிரியர் -**



## படைப்பில் ஆணும் பெண்ணும்

கடவுள் ஆண், பெண் இருவரையும் படைத்தபோது ஒரே விதமாகப் படைக்கவில்லை என்று வேதத்தில் பார்க்கிறோம். ஆணையும், பெண்ணையும் அவர் தம் சாயலில் படைத்தபோதும் ஒரேவிதமாகத் தோற்றமளிக்கும்படிப் படைக்கவில்லை. இன்று ஒருபாற்கூறு (unisex) என்ற வார்த்தை பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றது. இது ஆண், பெண் இருவருக்குமிடையில் இருக்கும் கடவுளால் ஏற்படுத்தப்பட்ட பேதங்களை அகற்ற முனையும் செயல். ஆனால் கடவுள் ஆணையும், பெண்ணையும் தோற்றத்திலேயே வித்தியாசமாகத்தான் படைத்தார். இது சொல்லிப் புரிந்து கொள்ள வேண்டிய அவசியமற்ற உண்மை. ஏனெனில் சேலை கட்டித் திரியும் ஆண்களையும், வேட்டியுடன் திரியும் பெண்களையும் நாம் இன்று பார்ப்பதில்லை. ஆதியாகமத்தில் கடவுள் மனிதனை முதலில் படைத்து பின் ஏவாளை அவனில் இருந்து படைத்தார் என்று வாசிக்கிறோம் (ஆதி. 2; 1 கொரி. 11:8; 1 தீமோ. 2:13). அதுமட்டுமல்லாது அவர்கள் இருவரையும் இணைத்து வைத்த கடவுள் ஆதாமே குடும்பத் தலைவனாக இருக்க வேண்டும் என்றும் பணித்தார் (1 கொரி. 11:3; 14:34, 35; 1 தீமோ. 2:12; எபேசி. 5:22-24; கொலோ. 3:1819).

கொரிந்தியருக்கு எழுதிய நிருபத்தில் (1 கொரிந்தியர் 11:1-16 வசனங்களில்), பொது இடங்களில் (அதாவது ஆண்களும், பெண்களும் கூடிவரும் இடங்களில்) ஆணும், பெண்ணும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று போதிக்கும் பவுல், அவ்விடங்களிலும் பெண் ஆணுக்குக் கர்த்தர் கொடுத்திருக்கும் தலைமைத்துவத்திற்கு மதிப்பளிக்கும் விதத்திலேயே நடந்து கொள்ள வேண்டும் என்று கூறுகிறார். இப்பகுதியின் மூன்றாம் வசனத்தில் 'புருஷன்' என்ற வார்த்தை மூல மொழியில் ஆணைக் குறிக்கின்றதே தவிர கணவனையல்ல. ஆகவே இப்பகுதி கணவன் மனைவியைப் பற்றியதாக அல்லாமல் பொதுவாக ஆண், பெண் ஆகிய இருபாலாரையும் குறித்த போதனையாக உள்ளது. சில வேத விளக்கவுரையாளர்கள், இப்பகுதியில் சபையில் ஆணும், பெண்ணும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று பவுல் போதிப்பதாகத் தவறாக விளக்கமளிக்கிறார்கள். பவுல் இப்பகுதியின் பதினேழாம் வசனத்தில் இருந்தே சபைக்காரியங்களைப் பற்றிப் போதிக்கிறார். 1 கொரி. 11:17 முதல் 14:40 வரையும் பவுல் சபை கூடிவரும்போது

கிறிஸ்தவர்கள் நடந்து கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றிப் போதிக்கிறார். எனவே இது ஒரு புதிய பகுதியாகக் கருதப்பட வேண்டும். ஆகவேதான் பதினேழாம் வசனத்தில் 'நீங்கள் கூடி வரும்போது' என்று பவுல் சபை கூடிவருதலைப் பற்றிக் குறிப்பிடுவதைப் பார்க்கிறோம். இதையே பதினெட்டாம், இருபதாம் வசனங்களிலும் பார்க்கலாம். ஆனால் முதல் பதினாறு வசனங்களிலும் ஒருமுறையாவது சபை கூடிவருதலைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. இவ்வசனங்கள் ஆணும் பெண்ணும் பொது இடங்களில் நடந்து கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றிப் போதிப்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். அதனால்தான் பவுல் இப்பகுதியில் ஆரம்பத்திலிருந்தே கிறிஸ்துவின் தலைமைத்துவத்தைப் பற்றியும், ஆணின் தலைமைத்துவத்தைப் பற்றியும் அடிக்கடிப் பேசுகிறார்.

அதுமட்டுமல்லாமல், இப்பகுதியின் 5 ஆம் வசனத்தில் பெண்கள் ஜெபிக்கவும், தீர்க்கதரிசனம் செய்யவும் (பேசவும்) அனுமதியுண்டு என்பதைப் பவுல் ஏற்றுக் கொள்கிறார் ('ஜெபம் செய்கிறபோதாவது, தீர்க்கதரிசனம் சொல்லுகிறபோதாவது தன் தலையை மூடிக் கொள்ளாதிருக்கிற எந்த ஸ்திரீயும் . .'). இங்கு இதை அனுமதிக்கும் பவுல் இன்னும் சில அதிகாரங்கள் தாண்டி 14 ஆவது அதிகாரத்தில் 33-35 வசனங்களில் பெண்கள் பேசக்கூடாது; அவர்கள் அமைதியாக இருக்க வேண்டும்; பேசுவதற்கு அவர்களுக்கு உத்தரவில்லை என்றெல்லாம் கூறுவதேன். பதினோராம் அதிகாரத்தில் ஒருவிதமாகவும், பதினான்காம் அதிகாரத்தில் இன்னொருவிதமாகவும் பவுல் போதிப்பதை நாம் எவ்வாறு விளங்கிக் கொள்வது?

இப்பிரச்சனையை இலகுவாகத் தீர்க்க முனையும் சிலர் பவுலுக்கு புத்தி சரியில்லை என்று கூறுகிறார்கள். வேறு சிலர், ஏற்கனவே பெண்கள் ஜெபிப்பதையும், பேசுவதையும் ஏற்றுக் கொண்ட பவுல் பதினான்காம் அதிகாரத்தில் சபைக் காரியங்களைப் பற்றி எழுதும்போது மனம்மாறி அதை நிராகரிக்கிறார் என்று விளக்கம் தருகிறார்கள். இவ்வாறான விளக்கங்கள் மூலம் இவர்கள் அப்போஸ்தலனான பவுலை அவமதிக்கிறார்கள். ஆனால் இவ்விரு வேதப் பகுதிகளையும் நாம் எவ்வாறு புரிந்து கொள்வது? நிச்சயமாக பவுல் தேவ ஆவியால் வழி நடத்தப்பட்டு சரியானதைத்தான் எழுதியிருக்கிறார் என்பதை நாம் முதலில் ஏற்றுக் கொண்டாக வேண்டும். அப்படியானால் பவுல் போதிப்பதென்ன?

நாம் ஏற்கனவே விளக்கியது போல் பதினோராம் அதிகாரத்தில் பவுல் ஆணும், பெண்ணும் பொது இடங்களில் நடந்து கொள்ள வேண்டிய முறைகளைப் பற்றியும், பதினான்காம் அதிகாரத்தில் சபையில் அவர்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்றும் போதிக்கிறார். ஏனெனில் 11:16-14 அதிகாரம் வரையிலான வேதபகுதிகள் சபை கூடிவருகின்றபோது நடக்க வேண்டிய காரியங்களைப் பற்றிப் போதிக்கின்றன. இவ்விளக்கம் மட்டுமே பவுலை அவமதிக்காமல் அவரது போதனையை நியாயப்படுத்தக்கூடியதாக உள்ளது. ஆகவே இவ்விரு பகுதிகளும் இருவேறு சந்தர்ப்பங்களில் இருபாலாரும் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதைப் போதிக்கின்றன. சபையாகக் கூடி வராத பொது இடங்களில் பெண்கள் ஜெபிக்கலாம், பேசலாம். ஆனால் சபைக்கூட்டங்களில் அவற்றிற்குத் தடையுண்டு. இவ்வாறு பெண்கள் ஜெபிக்கவும், பேசவும் கூடிய பொது இடங்கள் எவை என்பதை நாம் பிறகு பார்ப்போம். ஆனால் இப்போதைக்கு இவ்விரு சந்தர்ப்பங்களிலும் பெண்கள் படைப்பின் மூலம் கடவுள் ஆணுக்கே தலைமைத்துவத்தைத் தந்துள்ளதையும், அதை மதித்தே அவர்கள் எச்சந்தர்ப்பத்திலும் நடந்து கொள்ள வேண்டியிருப்பதையும் தெளிவாக்குவதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

## சபையில் ஆணும் பெண்ணும்


இன்று சபைகளில் பெண்களைப் போதகர்களாகவும், மூப்பர்களாகவும், உதவிக்காரர்களாகவும் நியமிப்பது வழக்காக இருக்கிறது. நவீன பெண்ணுரிமை இயக்கத்தின் போதனைகளின் பாதிப்பாலும், திருமறையின் அதிகாரத்தை உதாசீனம் செய்வதாலுமே சபைகள், வேதாகமக் கல்லூரிகள், கிறிஸ்தவ நிறுவனங்கள் ஆகியவை இன்று பெண்களை சமமாக நடத்துவதாகக் கருதி வேதத்திற்குப் புறம்பான வழிகளில் அவர்களை வழி நடத்துகின்றனர்.

திருமறை பெண்கள் சபையில் எவ்வகையில் நடக்க வேண்டும் என்று தெளிவாகப் போதிக்கின்றது. நாம் ஏற்கனவே அவதானித்த 1 கொரி. 11:1-16 வரையிலான வசனங்கள், 1 கொரி. 14:33-35 வரையிலான வசனங்கள், 1 தீமோத்தேயு 2 ஆம் அதிகாரம் ஆகியன இதைப் போதிக்கும் முக்கிய வேதப் பகுதிகள். இம்மூன்று வேதப்பகுதிகளிலும், 1 கொரி. 11:1-16 அடங்கிய வேதப்பகுதி பெண்கள் பொது இடங்களில் எவ்வாறு நடக்க வேண்டும் என்று போதிக்கின்றது. ஏனைய இரண்டும் அவர்கள் சபையில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று போதிக்கின்றன. இவற்றைக் கவனத்தோடு படித்துப் பார்க்கும்போது பெண்கள் அதிகாரபூர்வமாக வேதத்தை எடுத்துச் சொல்லும் பணியில் சபைகளில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று பவுல் கூறுவதைப் பார்க்கிறோம். அதாவது ஆணும், பெண்ணும் சபையாகக் கூடிவரும் இடங்களில் ஆண்களுக்கே அதிகாரபூர்வமாகப் போதிக்கும் பொறுப்பைத் தேவன் அளித்திருக்கிறார். இதற்குக் காரணமாக இவ் வேதப்பகுதிகள் அனைத்திலும் ஆதியில் படைப்பில் கடவுள் ஏற்படுத்தியுள்ள நிரந்தரமான கட்டளைகளைப் பவுல் நினைவு படுத்துகிறார். 1 கொரி. 24:34 - 'வேதமும் அப்படியே சொல்லுகிறது', 14:36 - 'வேத வசனம்' உங்களிடத்திலிருந்தா புறப்பட்டது?' ஆகிய வசனங்கள் கடவுளின் படைப்புக் கட்டளைகளை நினைவு படுத்துகின்றன.

சிலர் பெண்கள் தீர்க்கதரிசிகளாக இருந்துள்ளதாக வாதிடலாம். உண்மைதான்; ஆனால் அவர்கள் சபையில் தீர்க்கதரிசனம் சொன்னதாக வேதம் போதிக்கவில்லை. பவுல் ஏற்கனவே (1 கொரி. 14:33-35) எந்தவிதமான பேச்சையும் (தீர்க்கதரிசனம் உட்பட) சபையில் அனுமதிக்கவில்லை. ஆகவே அவர்கள் சபையில் தீர்க்கதரிசனம் சொன்னதாகக் கருதமுடியாது. பெண்கள் தீர்க்கதரிசனம் சொன்ன இடங்களையெல்லாம் வேதத்தில் ஆராய்ந்து பார்க்கும்போது அவை சபையில் சொல்லப்பட்டதாக நிரூபிக்க முடியாது.

வேறு சிலர் பவுல் பெண்களின் வெறும் கேளிக்கைப் பேச்சையே சபையில் நிராகரிப்பதாகவும், பேசுவதை முற்றாகத் தடை செய்யவில்லை என்றும் கூறுகிறார்கள். இக்கூற்றும் பொருந்தாது. ஏனெனில் 22 தடவைகள் 1 கொரி. 14 ஆம் அதிகாரத்தில் காணப்படும் 'பேச்சு' (Speak) என்ற வார்த்தை அவ்வதிகாரம் முழுவதும் தெளிவான, பொருள் பொதிந்த அதிகாரமுள்ள பேச்சைத்தான் குறிக்கின்றதே தவிர கேளிக்கைப் பேச்சையல்ல. ஆகவே இவ்வாதமும் பொருந்தாது. (வளரும்)

# திருமறை போதிக்கும் தூய வாழ்க்கை



கடந்த பத்தாண்டுகளில் பாதை தவறி பரிசுத்தத்தை இழந்து பாழாய்ப்போன நற்செய்தியாளர்களின் பட்டியல் சிறிதல்ல. பிரதானமாக அமெரிக்காவில் ஜிம் பேக்கர், ஜிம்மி சுவகர்ட் போன்றோர் பணத்தாசையாலும், பெண்ணாசையாலும் அழிவை நாடிச்சென்றதை நாடறியும். அதே வகையில் தமிழ் பேசும் நாடுகளிலும் பலர் இவ்விதமாக சரீர இச்சைகளுக்கு இடம் கொடுத்து சர்வேசுவரனின் ஐக்கியத்தை இழந்து, தேவ ஊழியத்திற்கே இழுக்கைத் தேடித் தந்துள்ளனர். மற்றவர்களுக்கு வழி காட்ட வேண்டியவர்களே வழி தவறி, நிலைகுலைந்து வழுக்கி வீழ்ந்துள்ளனர். ஆனால் சிலர் கிறிஸ்தவ வாழ்க்கையில் தவறுகள் நேரிடத்தான் செய்யும்; தாவீது தன் வாழ்வில் தவறு செய்யவில்லையா? என்று இவற்றைக் கண்டும் காணாமலும் இருந்துவிட முயலுகின்றனர்.

இவை சாதாரண தவறுகள் தானா? கிறிஸ்தவ வாழ்க்கையில் பலருக்கும் முன்னுதாரணமாக இருந்து வழிகாட்டுபவர்கள் வாழ்க்கையில் இவை தவிர்க்க முடியாதவையா? என்ற கேள்விகளுக்கு நாம் விடை காணத்தான் வேண்டும். அத்தோடு இவ்வாறு வாழ்க்கையில் வழுக்கி விழுந்தவர்களை நாம் எவ்வாறு நடத்த வேண்டும் என்றும் அறிந்து கொள்ளத் தான் வேண்டும்.

## தூய வாழ்க்கை

தூய்மையான வாழ்க்கையைக் கிறிஸ்தவர்கள் வாழ வேண்டிய அவசியத்தை வேதம் பல இடங்களில் வற்புறுத்துகின்றது. 'உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருப்பது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்' (1 பேதுரு 1:15) என்று திருமறை கூறுகின்றது. பவுலும் 'நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாக வேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது', 'தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்துள்ளார்' என்றும் (1 தெசலோ. 3:3, 7) கூறுவதைப் பார்க்கிறோம்.

அதே வேளை பவுல் கலாத்தியர் நிருபத்தில் 5:19-21 வரை மாம்சத்தின் கிரியைகளை வரிசைக் கிரமமாக அறிக்கையிட்டு இப்படிப் பட்டவைகளைச் செய்பவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று கூறுகிறார். இதையே எபேசியருக்கு எழுதிய நிருபத்திலும் விளக்கும் பவுல், 'பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவும் கூடாது' என்கிறார். அதாவது இவைகளின் சாயல்கூட உங்களில் படக்கூடாது என்று போதிக்கிறார்.

**கடந்த பத்தாண்டுகளில் பாதை தவறி பரிசுத்தத்தை இழந்து பாழாய்ப்போன நற்செய்தியாளர்களின் பட்டியல் சிறிதல்ல. மேலை நாடுகளிலும், தமிழ் பேசும் மக்கள் மத்தியிலும் பணத்தாசையாலும், பெண்ணாசையாலும் பலர் இவ்விதமாக சரீர இச்சைகளுக்கு இடம் கொடுத்து சர்வேசுவரனின் ஐக்கியத்தை இழந்து, தேவ ஊழியத்திற்கே இழுக்கைத் தேடித் தந்துள்ளனர். மற்றவர்களுக்கு வழி காட்ட வேண்டியவர்களே வழி தவறி, நிலைகுழைந்து வழுக்கி வீழ்ந்துள்ளனர். இவர்களது பரிசுத்த வாழ்க்கைக்கு என்ன நடந்தது ? பரிசுத்த வாழ்க்கையை எவ்வாறு வாழ்வது ?**

மேலும், 'விபச்சாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக் காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே' என்று கூறுகிறார். ஆகவே பரிசுத்த வாழ்க்கை இருக்க வேண்டிய இடத்தில் அசுத்தமானதெதுவும் இருக்க முடியாது என்பது தெளிவு.

## கிறிஸ்தவன் பாவம் செய்வானா?

அப்படியானால் கிறிஸ்தவன் வாழ்க்கையில் தவறே செய்ய மாட்டானா? என்று நீங்கள் கேட்கலாம். சிறு குழந்தை நடக்கப் பழகும் போது விழுந்தெழும்புவது போல் கிறிஸ்தவனும் தன் வாழ்க்கையில் அவ்வப்போது சில தவறுகளை செய்துவிடுவது வழமை. இதற்கான காரணத்தைத்தான் பவுல் ரோமர் 7 ஆம் அதிகாரத்தில் விளக்குகிறார். சிலர் இவ்வேதப் பகுதி கிறிஸ்தவன் அல்லாதவனுடைய அனுபவத்தைப் பற்றிப் பேசுவதாகத் தவறாகப் புரிந்து கொண்டுள்ளனர். ஆனால் பவுல் தனது சொந்த அனுபவத்தைப்பற்றியே இங்கு விளக்குகிறார்.

இவ்வுலகத்தில் பாவம் இருக்கும் வரையும், பாவம் நமக்குள் இருக்கும் வரையும் பாவம் செய்யக் கூடிய சந்தர்ப்பங்கள் ஏற்படுவது மட்டுமன்றி, அதை செய்யத் தூண்டும் இச்சைகளும் நமக்கு ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. ஏனெனில் பவுல் கூறுவதுபோல், நமக்குள் வாசமாயிருக்கிற பாவமே நமது இச்சைகளைத் தூண்டுகிறது. யாக்கோபு கூறுவது போல், நாம் நமது சுய இச்சைகளினால் இழுக்கப்பட்டு சோதிக்கப்படுகிறோம், பின்பு இச்சையானது கர்ப்பந்தரித்து பாவத்தைப் பிறப்பிக்கிறது (யாக்கோபு 1: 14-15).

அதேவேளை, கிறிஸ்துவை விசுவாசித்து இரட்சிப்பை அடைந்த பின்பு நம்மீது பாவத்திற்கு இருந்த

ஆதிக்கம் அழிக்கப்பட்டிருப்பதால் முன்போல் நாம் பாவத்தை தொடர்ந்து செய்ய மாட்டோம். கிறிஸ்துவை விசுவாசிப்பதற்கு முன்பு நாம் பாவத்தின் கட்டுப்பாட்டிற்கு அடங்கி வாழ்ந்திருந்தோம். இப்போதோ அக்கட்டுப்பாட்டிலிருந்து விடுதலையடைந்திருப்பதோடு ஆவியின் துணையோடு பாவத்தைத் தொடர்ந்து செய்யாமலிருக்கும் வல்லமையும் நமக்குக் கிடைத்திருக்கின்றது. ஆகையால்தான் யோவான் தனது முதலாம் நிருபத்தில் 'அவரில் நிலைத்திருக்கிற எவனும் (தொடர்ந்து) பாவம் செய்வதில்லை', 'தேவனால் பிறந்த எவனும் (தொடர்ந்து) பாவம் செய்யான்' *(1 யோவான் 3:6, 9)* என்று கூறுகின்றார். கிறிஸ்துவை நாம் நேசிப்பதால் பாவத்தை இப்போது வெறுக்கிறோம். அதோடு எந்தத் தொடர்பும் வைத்துக் கொள்வதை நாம் தவிர்க்க விரும்புகிறோம். சில வேளைகளில் பாவத்தை செய்து விட்டாலும் குற்றவுணர்வினாலும், நம்மை நேசிக்கும் கிறிஸ்துவை அலட்சியப்படுத்திவிட்ட வேதனையாலும், ஆவியைத் துக்கப்படுத்திவிட்டதாலும் கர்த்தரின் மன்னிப்பை நாடி ஓடி வருகிறோம்.

## பரிசுத்த வாழ்க்கையைப்பற்றிய தவறான எண்ணங்கள்

பரவசக்குழுவைச் சேர்ந்தவர்களும், வேறுசில கிறிஸ்தவர்களும் கிறிஸ்தவ வாழ்க்கையில் எல்லாம் சுலபமாக நடந்துவிடும் என்று எதிர்பார்க்கிறார்கள். கிறிஸ்தவ வாழ்க்கையில் போராட்டமே இருக்கக்கூடாது என்பது இவர்களது முடிவு. கிறிஸ்து தன் மரணத்தின் மூலம் சகல பாவங்களிலும் இருந்து நம்மை மன்னித்துவிட்டதால் இனிப் பாவமே நம் வாழ்க்கையில் தலை காட்டாது என்ற விதத்தில் பொருள் கொள்கின்றனர். வேறுசிலர் பாவத்தால் சோதிக்கப்படும் போது தம் இச்சைகளை அடக்கி ஒடுக்கி அவ்விடத்தைவிட்டு ஓட முனையாது வெறுமனே ஜெபத்தின் மூலம் மட்டும் தப்பிக் கொள்ளலாம் என்று எண்ணுகின்றனர். பரவசக்குழுவினரில் சிலர் பரிசுத்த ஆவியின் முழுக்கைப் பெற வேண்டும், அந்நிய பாஷையில் பேச வேண்டும், சிரிப்பாவியைப் பெற வேண்டும் என்றெல்லாம் வேதத்தைத் திரித்துப் போதித்து வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கைக்கு இவையே அடையாளங்கள் என்று காட்ட முனைகின்றனர்.

அன்ட்ரூ மரே, எப். பி. மேயர், வாட்ச்மன் நீ, போன்றோரின் போதனைகளால் பாதிக்கப்பட்டவர்கள் நமக்குள் வாழும் கிறிஸ்து நமது பாவங்களைப் போக்கிவிடுவார்; நாம் எதுவும் செய்யத் தேவையில்லை என்று எண்ணுகின்றனர். இந்நம்பிக்கைக்கு இவர்கள் சான்றாகக் காட்டும் வேதப்பகுதி *கலாத்தியர் 2:20* ஆகும். இவ்வேதப்பகுதியை இவர்கள் சரிவரப் புரிந்து கொள்ளவில்லை. பவுல் இவ்வசனத்தில் 'இனி நானல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்' என்று கூறும்போது நாம் கிறிஸ்தவ வாழ்வில் இனிச் செய்ய வேண்டியது ஒன்றுமேயில்லை என்று பொருள் கொள்ளவில்லை. அப்படியானால் பவுல் இதே நிருபத்தில் மாம்சத்தின் வழியில் நாம் தொடர்ந்து நடக்காதிருக்க வேண்டும் என்று போதிப்பதெப்படி? அத்தோடு பவுலின் ஏனைய நிருபங்கள் நாம் கிறிஸ்தவ வாழ்க்கையில் பாவத்திற்கெதிரான சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் என்று போதிப்பதால் பவுல் முரண்பாடாகப் போதிக்கவில்லை என்று உணர முடிகின்றது.

**பாவம் நம்மை சோதிக்கிறபோது அவ்விடத்தைவிட்டு ஓடுவதென்பது இலகுவான காரியமல்ல. அவ்வாறு ஓடுவதற்கேற்ற விதத்தில் நமது சரீரமும் உள்ளமும் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். பயிற்றப்படாத உள்ளம் இச்சைகளுக்குத் தன்னை இலகுவாக ஒப்புக் கொடுத்துவிடும்.**

ஆதி முதல் இருந்து வரும் இன்னுமொரு துர்ப்போதனை, கிறிஸ்து நமக்கு விடுதலை தந்துள்ளதால் நாம் எந்தவிதக் கட்டளைகளுக்கும் அடிபணிய வேண்டியதில்லை, அன்பு இருந்தால் மட்டும் போதும், நம் பாவங்கள் அன்பாலும் கடவுளின் கிருபையாலும் கரைந்துவிடும் என்பதாகும். இதனை 'அன்டிநோமியன்' (Antinomian) போதனை என்று அழைப்பார்கள். இப்போதனை பரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்கு நாம் எந்தவிதக் கட்டுப்பாடான வாழ்க்கையும் வாழவேண்டிய அவசியமில்லை என்று போதிக்கின்றது. கிறிஸ்தவ வாழ்க்கையில் தொடர்ந்து மனந்திரும்ப வேண்டிய அவசியத்தையும் நிராகரிக்கின்றது. ஆகவே ஒருவன் குடிப்பதற்கும், சினிமா பார்ப்பதற்கும், களியாட்டங்களில் ஈடுபடுவதற்கும் அவனது பரிசுத்த வாழ்க்கைக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்பது இப்போதனையின் முடிவு. 'கிறிஸ்தவ சுதந்திரம்' என்ற பெயரில் கிறிஸ்துவை அவமதிக்கும் இத்துர்ப்போதனையும் இன்று பரவலாக உள்ளது.

இத்தகைய தவறான கருத்துக்கள் உலவி வருவதற்குக் காரணம், கிறிஸ்து நம்மை இரட்சித்தபோது நமக்கு என்ன நடந்தது? பாவத்தைப் பற்றி வேதம் என்ன போதிக்கின்றது என்று சரிவரப்புரிந்து கொள்ளாதது தான். இந்நம்பிக்கைகள் கிறிஸ்தவர்கள் பரிசுத்தமான வாழ்க்கையைத் தொடர்ந்து வாழ்வதற்குத் தடையாக அமைகின்றன.

## பாவத்தைத் தவிர்ப்பது எப்படி?

பாவத்தைத் தவிர்ப்பதற்கான வழியைப் போதிக்கும் வேதம் முதலாவதாக நாம் அதைவிட்டு விலகி ஓட வேண்டும் என்று கூறுகிறது *(1 கொரி. 6:18; 10:14; 1 தீமோ.6:11; 2 தீமோ.2:22)* பாவத்தால் நமது இச்சைகள் தூண்டப்படுகிறபோது யோசேப்புவைப் போல அந்த இடத்தைவிட்டே நாம் ஓடப் பழக வேண்டும். ஒருவன் கிறிஸ்தவனாக இருப்பதால் இது தானாகவே அவனில் நடக்கும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. கிறிஸ்தவ வாழ்க்கைக்கு வேதம் நம்மைப் பொறுப்பாளியாகக் கருதுகிறது. ஆகவே பரிசுத்த வாழ்க்கை நடத்துவதற்கான சகல நடவடிக்கைகளையும் நாம் கர்த்தரின் துணையோடு எடுத்தாக வேண்டும்.

பாவம் நம்மை சோதிக்கிறபோது அவ்விடத்தைவிட்டு ஓடுவதென்பது இலகுவான காரியமல்ல. அவ்வாறு ஓடுவதற்கேற்ற விதத்தில் நமது சரீரமும் உள்ளமும் பயிற்சி பெற்றிருக்க வேண்டும். பயிற்றப்படாத உள்ளம் இச்சைகளுக்குத் தன்னை இலகுவாக ஒப்புக் கொடுத்துவிடும். யோசேப்பு பாவத்தைவிட்டு விலகி ஓடியதற்குக் காரணம், அவன் தன் உள்ளத்தையும், சரீரத்தையும் கடினப் பயிற்சிக்கு உற்படுத்தியிருந்ததுதான். அத்தகைய பயிற்சியில் ஈடுபடாமல் நமது கால்கள் தானாக பாவத்தை விட்டு விலகியோடும் என்று நாம் எதிர்பார்க்க முடியாது. அவ்வாறு எதிர் பார்ப்பது வேதம் போதிக்கும் கிறிஸ்தவ வாழ்க்கையைத் தவறாகப் புரிந்து கொண்டதற்கு அடையாளமாகும்.

திருமறை நாம் நமது சரீரத்தை இத்தகைய கடினப்பயிற்சிக்கு உற்படுத்த வேண்டும் என்று எதிர்

பார்க்கிறது. பவுல் அப்போஸ்தலன் கிறிஸ்தவ வாழ்கையை பந்தயச்சாலையில் ஓடுகிறவர்களுக்கும், போர்வீரர்களுக்கும் ஒப்பிடுகிறார் *(1 கொரி. 9:24-27; 2 கொரி. 10:36)*. கிறிஸ்தவ வாழ்க்கை மல்யுத்தப் பயிற்சியுடனும் ஒப்பிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் கிறிஸ்தவர்கள் தங்கள் வாழ்க்கையில் அன்றாடம் அத்தகைய பயிற்சியில் ஈடுபட்டாக வேண்டுமென்பதுதான்.

இத்தகைய பயிற்சிக்கும் போராட்டத்திற்கும் துணையாகவே கடவுள் நமக்கு சில ஆயுதங்களை வழங்கியுள்ளார். பவுல் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் 6 ஆம் அதிகாரத்தில் 13 முதல் 20 வரையும் இத்தகைய ஆயுதங்களின் பட்டியலை நமக்குத் தருகிறார். இவற்றை நாம் அன்றாடம் ஜெபத்தோடு பயன்படுத்த வேண்டும். போராயுதங்களை அணியாமலும், போருக்குத் தயாராகாமலும் எந்தப் போர்வீரனும் இருப்பதில்லை. அதேபோல் கிறிஸ்தவன் தனது எதிரியான பிசாசின் தந்திரங்களுக்குத் தப்பி பாவம் செய்யாமலிருக்க தனது ஆயுதங்களைக் கவனத்தோடும், திறமையாகவும் பயன்படுத்த வேண்டும்.

## ஆவியின் பாதையில் நடப்பது எப்படி?

திருமறை நாம் மாம்சத்தின் வழியில் நடக்காமல் ஆவியின் வழியில் நடக்க வேண்டும் என்று போதிக்கின்றது. இதையே பவுல் ரோமர் 8 ஆம் அதிகாரத்தில் விளக்குகிறார். ஆனால் ஆவியின் வழியில் நடப்பது என்பதற்குப் பொருள் என்ன? பலர் ஆவியின் வழியில் நடப்பது என்றால் ஆவியை விசேடமாக அடைவது என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் வேதமோ ஒவ்வோரு கிறிஸ்தவனும் இரட்சிப்பை அடைகிறபோது ஆவியையும் அடைகிறான் என்று போதிக்கின்றது. ஆவியானவர் ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் குடியிருக்கிறார். அவர் நம்மில் குடியிருப்பதால் தான் நமக்கு கிறிஸ்துவின் மேல் அன்பு இருக்கின்றது; அவரை வழிபட வேண்டும், அவரது வார்த்தையின்படி நடக்க வேண்டும் என்ற வாஞ்சையும் இருக்கின்றது. ஆவியைப் பெறாதவன் இவ்வாறெல்லாம் எண்ண மாட்டான், ஏனெனில் அவனுள்ளத்தில் பாவம் மட்டுமே செயல்படுகின்றது. அவன் பாவத்தின் வழிகளில் மட்டுமே நடப்பான்.

கிறிஸ்தவர்களாகிய நமக்குள் இருக்கும் ஆவி நாம் தேவனின் வழிகளில் செல்லத் துணைபுரிகிறார். அதை நாம் எப்படி அறிந்து கொள்ள முடியும்? கிறிஸ்தவன் தொடர்ந்து கர்த்தரின் வார்த்தையின்படி அவரை மகிமைப்படுத்தும் காரியங்களைத் தன் வாழ்வில் செய்கிறபோது அவனில் ஆவியின் செயலை நாம் பார்க்கிறோம். ஒருவன் மாம்சத்தின் வழியில் போகிறபோது அவனில் ஆவியின் செயற்பாடு இல்லாமலிருப்பதைப் பார்க்கிறோம். இதையே பவுல் ரோமரில், 'மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்திற்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்; ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவியின்படி சிந்திக்கிறார்கள். 'தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்திற்குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல' *(ரோமர் 8:5, 9)* என்று கூறுகிறார். மேலும், 'மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்' என்றும் கூறுகிறார்.

**பலர் ஆவியின் வழியில் நடப்பது என்றால் ஆவியை விசேடமாக அடைவது என்று எண்ணிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் வேதமோ ஒவ்வோரு கிறிஸ் தவனும் இரட்சிப்பை அடைகிற போது ஆவியையும் அடைகிறான் என்று போதிக்கின்றது. ஆவி ஒவ்வோரு கிறிஸ்தவனிலும் குடியிருக்கிறார். அவர் நம்மில் குடியிருப்பதால் தான் நமக்கு கிறிஸ்துவின் மேல் அன்பு இருக்கின்றது; அவரை வழிபட வேண்டும், அவரது வார்த்தையின்படி நடக்க வேண்டும் என்ற வாஞ்சையும் இருக்கின்றது. ஆவியைப் பெறாதவன் இவ்வாறெல்லாம் எண்ண மாட்டான்,**

ஆகவே ஆவியின் வழியில் நடப்பது என்பது கிறிஸ்தவர்களாகிய நமக்குள் இருக்கும் ஆவியை மீண்டும் பெற முயல்வதோ அல்லது நாம் பரிசுத்த வாழ்க்கையை வாழ்வதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் ஆவியை நோக்கிக் காத்திருப்பதோ அல்ல. இதை சுருக்கமாக விளக்கும் பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபத்தில், 'ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கிறபோது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள். ஏனெனில் தேவனே தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி விருப்பத்தையும் செய்கையையும் உங்களில் உண்டாக்குகிறவராயிருக்கிறார்' என்று கூறுகிறார். இதன் மூலம் பவுல் விளக்குவதென்னவெனில், எவன் ஒருவன் அதிக பிரயாசையோடும், பயத்தோடும் தனது கிறிஸ்தவ வாழ்க்கையை கர்த்தருடைய மகிமைக்காக நடத்துகிறானோ அவனில் மட்டுமே கடவுளுடைய செய்கையையும், அவரது ஆவியின் செயற்பாட்டையும் காண முடியும் என்பதுதான். ஆவியின் வழியில் நடக்க இதைத்தவிர வேறு வழிகளை வேதம் போதிப்பதில்லை.

## ஆவியால் நிரப்பப்படுவது எப்படி?

வேதம் ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஆவியால் நிரப்பப்பட வேண்டும் என்று போதிக்கின்றது. பரிசுத்த வாழ்க்கை வாழ்கிறவன் தொடர்ந்து பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருப்பான். இதைக் குறித்தும் எத்தனையோ தவறான போதனைகள் உலவி வருகின்றன. ஆவியால் நிரப்பப்படுவது என்றால் என்ன? எபேசியர் 5:18 இல் பவுல் நாம் 'மதுபான வெறி கொள்ளாமல் ஆவியினால் நிறைந்திருக்க' வேண்டுமென போதிக்கிறார். பவுல் கூறுவதை விளங்கிக் கொள்ள நாம் முழு வசனப் பகுதியையும் வாசித்தல் அவசியம். பதினைந்தாவது வசனத்தில் ஞானமற்றவர்களைப் போல் நடவாது, ஞானமுள்ளவர்களைப் போல் எவ்வாறு நடப்பது என்று இப்பகுதியில் போதிக்கும் பவுல் அப்போதனையின் ஒரு பகுதியாகத்தான் 'ஆவியால் நிரம்பியிருக்க' வேண்டுமென்று கூறுவதைப் பார்க்கிறோம். அதாவது ஒருவன் ஞானமுள்ளவனாக, காலத்தைப் பிரயோஜனப்படுத்தி, மதுவெறியற்று, கர்த்தருடைய சித்தம் இன்னதென அறிந்து கொள்கிறபோது அவன் ஆவியின் நிரம்புதலுக்குட்பட்டிருக்கிறான் என்பது பவுலின் போதனை. மேற்கூறப்பட்ட இலக்கணங்களைக் கொண்டிராதவன் ஆவியினால் நிரப்பப்பட்டிருக்கவில்லை. இதை விட்டு இன்று பலர் ஆவியினால் நிரப்பப்படுவதென்பது கிறிஸ்தவ வாழ்வில் அற்புதமாக நிகழும் ஒரு நிகழ்ச்சியெனவும், ஒருவனின் விசுவாசத்தோடும், பரிசுத்த வாழ்க்கையோடும் தொடற்பற்றதொன்றாகவும்

கருதி வருகின்றனர். இது பவுலின் போதனைக்கு முரணானது. ஒருமுறை நமக்குள் வந்து குடியிருக்கும் ஆவி நம்மை விட்டு அகலுவதுமில்லை; வந்து போய்க்கொண்டிருப்பது மில்லை. கிறிஸ்தனின் பரிசுத்த வாழ்க்கையின் ஒரு அங்கமே அவன் ஆவியால் தொடர்ந்து நிரப்பப் பட்டிருப்பது. இது எல்லாக் கிறிஸ் தவர்களும் தம் வாழ்வில் தொடர்ந்து அனுபவிக்கும் ஒரு அனுபவம். ஒரு சிலருக்கு மட்டுமே கொடுக்கப்பட்ட அற்புத அனுபவமல்ல.

### ஊழியக்காரர்களின் வீழ்ச்சிக்குக் காரணம்

ஆரம்பத்தில் நாம் கூறியது போல பரிசுத்த வாழ்க்கையில் மற்றவர்களுக்கு முன்னுதாரணமாக இருக்க வேண்டிய ஊழியக்காரர் களில் பலர் இன்று வழுக்கி விழுவதற்குக் காரணமென்ன? பரிசுத்த வாழ்க்கை வாழ்வதற்கு இவர்களால் முடியாவிட்டால் நாம் எப்படி வாழ்வது என்று பலரையும் எண்ணத் தூண்டும் செயல்களுக்குக் காரணம் என்ன?

ஊழியம் செய்பவர்கள் வழு க்கி விழுகின்றபோது நாம் எப் போதுமே கேட்க வேண்டிய முக்கிய கேள்வி அம்மனிதன் உண்மையாகவே தேவனை அறிந்திருக்கிறானா? என்பது தான். ஏனெனில் திருமறை யில் மேலான அறிவைக் கொண்டிருந் தும், பல ஆவிக்குரிய வரங்களைக் பெற்றிருந்தும் ஒருவன் தேவனை அறியாமல் இருக்கலாம் (மத்தேயு 7:21-23). வேதத்தில் இதற்குப் பல சாட்சிகள் உண்டு. ஒரு மனிதன் கர்த்தரை அறியாமல் ஊழியத்தை ஒரு தொழிலாக மட்டும் கருதி மற்றவர் களை ஏமாற்றி வரலாம். சபையையும், ஊழியத்தையும் குடும்பச் சொத்தாகக் கருதி வருபவர்கள் மத்தியில் இது சாதாரணமாகவே நிகழும் காரியம். ஆகவே தான் ஊழியம் திருமறை பூர்வமாக அமையும்படிப் பார்த்துக் கொள்வது அவசியம்.

அதுமட்டுமல்லாது பவுல் கலாத்தியருக்கு எழுதிய நிருபத்திலும், எபேசியருக்கு எழுதிய நிருபத்திலும் பட்டியலிட்டுத் தரும் செயல்கள் (கலா. 19:21; எபேசி. 5:3-5) சாதாரண பாவங்களல்ல. எல்லாப் பாவங் களுமே பாவங்களாக இருந்தாலும் சில பாவங்கள் பாரதூரமானவை. அவற்றால் ஒருவன் வாழ்வில் பல பாதிப்புகள் ஏற்படும். அத்தகைய பாவங்களை ஒரு கிறிஸ்தவன் சாதாரணமாக செய்ய முற்பட மாட்டான். அவ்வாறான பாவங் களைத் தன்னைக் கிறிஸ்தவன் என அழைத்துக் கொள்ளும் ஒருவன் செய்திருப்பானெனில், அவற்றை அவன் பல வருடங்கள் ஒருவருக்கும் தெரியாமல் மறைமுகமாக செய்து வந்திருந்தாலன்றி திடீரென செய்ய முடியாது. ஆகவேதான் அவனது கிறிஸ்தவ வாழ்க்கை ஆராயப்பட வேண்டியது அவசியம். அவன் உண்மையிலேயே கிறிஸ்தவனாக இருந்து அப்பாவத்தைச் செய்திருந் தால் அதை நிச்சயமாக அவன் பலருக்கும் தெரியாமல் செய்து வந்திருக்க வேண்டும். எனவே அம் மனிதன் அக் கொடிய பாவத்தின் சகல கறைகளிலும், கட்டுக்களிலும் இருந்து அகலும் விதத்தில் அவனுக் குத் துணை புரிய வேண்டும்.

அத்தகைய மனிதன் ஒரு ஊழியக்காரனாக இருந்தால் அவ் வூழியத்தின் சகல பொறுப்புக்களில் இருந்தும் அவன் முதலில் நீக்கப்பட வேண்டியது அவசியம். இன்று சிலர்

**வெறும் காய்ச்சலுக்கும் கான்சருக்கும் வித்தியாசம் தெரியாதவர்கள் இவ்வுலகில் இருக்க முடியாது. பாவத்தில் மோசமானதைச் செய்து விட்டு ஒன்றுமே நடக்காதது போல் வெறும் காய்ச்சல்தான் என்று உதறிவிட முடியாது.**

வேசித்தனத்தில் ஈடுபட்டுவிட்டு கடவுள் என்னை மன்னித்து விட்டார் அது போதாதா என்று கூறி வேதத்தைத் தூக்கிக் கொண்டு மறுபடியும் மேடை ஏறி விடுகின்றனர். காய்ச்சலுக்கும் கான்சருக்கும் வித்தி யாசம் தெரியாதவர்கள் இவ்வுலகில் இருக்க முடியாது. பாவத்தில் மோசமானதைச் செய்து விட்டு ஒன்றுமே நடக்காதது போல் வெறும் காய்ச்சல்தான் என்று உதறிவிட முடியாது.

அம்மனிதன் அப்பாவத்தைச் செய்வதற்குக் காரணமாக இருந்த வழிகளையெல்லாம் ஆராய்ந்து அவன் அதைத் தொடராதிருக்கும் விதத்தில் அவனுக்குத் துணை செய்ய வேண்டும். இது மூன்று வாரத்திலோ அல்லது மூன்று மாதத்திலோ நடந்து முடிந்துவிடக்கூடிய காரியமல்ல. இதற்குப் பலகாலமெடுக்கலாம். அதுவரை அவன் ஊழியத்தில் ஈடுபடக்கூடாது. அத்தகைய பாவ த்தைச் செய்துவிட்டு ஊழியத்தில் ஈடுபட ஒருவன் முனைந்தால் அதுவே அவன் உண்மையில் மனந்திரும்ப வில்லை என்பதற்குச் சான்றாகும். ஊழியத்திற்கான இலக்கணங்கள் இச்செயல்களைக் கண்டிக்கின்றன.

இன்று பலர் இவ்வாறு பாவம் செய்துவிட்டு ஊழியத்தைத் தொடர் வதற்குக் காரணம் அவர்களுக்கு சபைக்கட்டுப்பாடு இல்லாததுதான். தனி நிறுவனங்களை நடத்தி யாருடைய கட்டுப்பாடுமில்லாமல் நடந்ததால்தான் அவர்கள் பாவகர மான காரியங்களில் ஈடுபட நேரிடு கிறது. இத்தகைய செயல்களைச் செய்துள்ள பலர் கிறிஸ்தவ நிறுவனங் களின் தலைவர்களாக இருந்திருப் பதில் வியப்பில்லை.

இத்தகைய செயல்களில் ஈடுபட்டவர்கள் சபைக் கட்டுப்பாட் டிற்குத் தம்மை ஒப்புக்கொடுத்து போதகர்களின் துணையோடு தங் களது செயல்களின் முழுப் பாதிப்பை யும் உணர்ந்து அவற்றில் இருந்து முழுமையாக விடுபடும் வழிகளைப் பார்க்க வேண்டும். அவனுடைய பாவம் அவனை மட்டுமல்லாமல் அவனது குடும்பம், நிறுவனம் இன்னும் எத்தனையோ பேரையும் பாதித்திருக்கலாம். இவர்கள் எல்லோ ருமே இவற்றின் பாதிப்பிலிருந்து விடுதலை பெற வேண்டியது அவசி யம். தாவீதின் உதாரணத்தை மட்டும் வைத்துக் கொண்டு தாண்டவம் ஆட முயலுவதைப்போலக் கொடுமை வேறில்லை. தாவீது தான் செய்த பாவத்திற்காக வருந்தியது மட்டு மல்லாமல், அதற்கான தேவசிட்சை யை ஏற்று, சுயவெறுப்பைக் கடைப் பிடித்து பலகாலம் வாழ்ந்ததை மறக்கக்கூடாது.

பரிசுத்த வாழ்க்கையைக் கிறிஸ் தவர்கள் ஆவியின் துணையோடு அதிக பயத்தோடும், நடுக்கத்தோடும் தங்கள் இரட்சிப்பு நிறைவேறும்படி யாக பிரயாசையுடன் வாழ வேண் டும். பாவ இச்சைகளை அன்றாடம் அடக்கி, ஆவியின் கனிகளைத் தம்மில் வளர்த்துவர வேண்டும். கட்டுப்பாடு களை வெறுக்காது, சுய வெறுப்பைக் கடைப்பிடித்து வளர வேண்டும். கிருபையின் சாதனங்களைத் தவறாது பயன்படுத்தி தேவ அன்பில் திளைக்க வேண்டும். கர்த்தருக்கு முன் பாவங் களை அறிக்கையிட்டு, மனந்திரும்பு தலை அன்றாடக் கடமையாகக் கொள்ள வேண்டும். இவற்றின் மூலமே கிறிஸ்து நமக்குத் தந்துள்ள சுதந்திரத்தையும், அவரது அன்பையும் நாம் ருசி பார்க்க முடியும். கட்டுப் பாடற்ற, பாவத்தைப் பற்றிய அக்கறை யற்ற வாழ்க்கைக்கும் கிறிஸ்தவ வாழ்க் கைக்கும் எந்தவிதமான தொடர்பு மிருக்க முடியாது.

# ஆவிக்குரிய வாழ்க்கையின் நேர்முக அடையாளம் "சுய வெறுப்பு"

## Self-denial

ஈ. ஜே. ஆப்பில்பி

சுயவெறுப்பு ஆவிக்குரிய வாழ்க்கையின் மற்றொரு அறிகுறியாகும். தேவ மகிமைக்குப் பயன்படாத யாவற்றையும் மனப்பூர்வமாகத் துறப்பது சுய வெறுப்பாகும். இன்பத்தை விரும்புவதும், துன்பத்தை வெறுப்பதும் மனித இயற்கை. தன்னை நேசிப்பதற்கும் தன்னலம் பாராட்டுதலுக்கும் வித்தியாசமுண்டு. தன்னை நேசிப்பது பாவமன்று; மிதமிஞ்சித் தன்னை நேசிப்பதே பாவமாகும்.

சுய வெறுப்பும் தன்னலமும் ஒன்றுக்கொன்று எதிரானவை. ஒருவன் தன் வாழ்க்கையை மட்டுமே முக்கியமானதாகக் கருதினால் அது தன்னலம். ஒருவன் தனக்கு ஏற்றதாக மிகவும் சிறப்பானதைப் பற்றிக் கொள்ள வேண்டும். மிகச் சிறந்ததாக ஒன்று மட்டுமே இருக்கக் கூடும். ஆன்மாவானது, ஒன்று தன்னைப் பற்றிக் கொள்ளும் அல்லது கடவுளைச் சார்ந்திருக்கும். தன்னை விட மிக மேலானதை ஒருவன் நாடும் பொழுது, அவன் கடவுளைக் கண்டடைகிறான். கடவுளை விட்டுப் புறம்பே நோக்கும் பொழுது அவன் தன்னையே நோக்குவான். கடவுளைப் பற்றிக் கொள்ளாத அன்பு தன்னலமுள்ளது. இயேசு கிறிஸ்துவைத் தேடாத மனிதர் தங்கள் சொந்தக் காரியத்தையே நாடுகிறார்கள். தன்னலமுள்ள அன்பே அவர்கள் இருதயத்தின் நாட்டமாயிருக்கிறது. அதுவே அவர்களை இயக்குகிறது. அவர்கள் தங்களை மிதமாக நேசியாமல் தீவிரமாக நேசிக்கிறார்கள். தங்கள் நலனை மாத்திரம் தங்கள் வாழ்க்கையின் இலக்காகக் கருதுகிறார்கள்.

அவர்களது எண்ணம் கிறிஸ்தவ சுய வெறுப்பிற்கு மாறானது. தன்னலங்கருதாமல் பிறரை நேசிப்பது கிறிஸ்தவத்தின் சுயநலமற்ற அன்பு. ஒருவன் தன்னை வெறுத்தால் அவன் தேவ காரியத்தில் ஆர்வம் கொள்ளக் கூடும். அப்படிப்பட்டவன் தன் மகிமையைத் தேடாமல் கடவுளுடைய மகிமையைத் தேடுவான். முன்பு அவன் கடவுளை மறுதலித்தான். இப்பொழுதோ தன்னை மறுதலித்து, கடவுளுக்கு எக்கடமையையுஞ் செய்ய விருப்பமும் ஆயத்தமுள்ளவனுமாயிருப்பான். கடவுளுக்கு விரோதமான எப்பாவத்தையும் வெறுத்து விடுவான். கிறிஸ்துவின் மேன்மைக்காக மகிழ்ச்சியுடன் எத்தியாகமும் செய்வான். கடவுள் முன் தான் அற்பத்தூசியென்று உணருவான். கடவுள் அவனை உயர்த்தினாலும் தாழ்த்தினாலும் அவன் மகிழ்ச்சியுடன் இருப்பான். தன் முன்னேற்றத்தைப்பற்றிச் சிறிதும் கவலைப்படாமல், கிறிஸ்து மகிமைப்படுவதில் அக்கறை காட்டுவான்.

இதுவே தன்னை வெறுப்பதாகும். கடவுளுக்கு மகிமையைத் தராதது எதையும் துறந்துவிட வேண்டும். வேதத்தில் தங்களை வெறுத்தவர்கள் பலர் உண்டு. ஆபிரகாம் தனக்கு வாக்களித்துத் தரப்பட்ட மகனைப் பலியிட ஆயத்தமாயிருந்தான். கடவுளுக்காக மூவர் நெருப்புச் சூளையில் உயிர் துறக்கத் துணிந்து, வெற்றி வாகை சூடினார்கள். அப்போஸ்தலர்களும், இரத்தச் சாட்சிகளும் தங்கள் உயிரையும் வாழ்க்கையையும் துச்சமாக மதித்தார்கள்; பிறர் ஏளனத்தைக் கூசாது பொறுக்கும் சுய வெறுப்புள்ளவர்களாயிருந்தார்கள். சத்துருக்கள் தங்களை அடித்துச் சிறைப்படுத்தினாலும் அச்சமின்றியிருந்தனர். தங்களைத் தீயில் எரித்தபொழுது வெற்றி முரசு கொட்டினார்கள். பட்டயத்தைப் பார்த்துப் புன்முறுவல் கொண்டார்கள். நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தியாகம் உச்ச நிலையிலுள்ளது. அவர் வானலோகத்தின் மகிமையைத் துறந்து அடிமையாகிச் சிலுவையில் சாகத் துணிந்தார். அவர் தம் விருப்பத்தின்படி வாழாமல், தன் சொந்த மகிமையைத் தேடாமல் தம்மை அனுப்பின பிதாவின் மகிமைக்காக உழைத்தார். "அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினாலே ஐசுவரியவான்களாகும்படிக்கு, உங்கள் நிமித்தம் தரித்திரனானாரே" (2 கொரி. 8:9).

இயேசு தம் சாவை எதிர்நோக்கியிருந்தார். அவர் மனிதனாக வாழ்ந்ததினால், சாவிலிருந்து விடுபட விரும்பியது இயற்கையே. தம் எதிரிகள் தம்மை மிகவும் பகைத்ததினால் கொடிய பாடுபட நேரிடும் என்று அறிந்திருந்தார். ஆனால் அந்த இன்னல்களிலிருந்து பின் வாங்கவில்லை. எருசலேமை நோக்கி வீரத்துடன் நடந்தார். தம் பாடுகளை சீடர்களிடம் முன் அறிவித்தார். கெத்செமனேயில் தம் பாடுகளை நினைத்து அங்கலாய்த்தார். பிதாவின் மேன்மைக்காகத் தம்மை முற்றிலும் வெறுத்தார். அவர் இருதயம் நொருங்குண்டவராக ஜெபித்ததாவது: "நான் தண்ணீரைப்போல ஊற்றப்படுகிறேன்; என்னுடைய எலும்புகள் எல்லாம் கட்டுவிக்கிறது. என் இருதயம் மெழுகு போலாகி என் குடல்களின் நடுவே உருகிப் போயிற்று. என் வேர்வை இரத்தமாக மாறிற்று; என் அப்பா, ஏன் உமது திருமுகத்தை மறைத்து என்னைக் காரிருளில் விட்டுவிடுகிறீர்? இவ்வுலகத்தின் பாவங்களைச் சுமந்து நான் பாதாளத்திற்குச் செல்கிறேன். அப்பா, உமக்குச் சித்தமானால் இந்த ஆபத்து நீங்கட்டும். என்னைக் காப்பாற்றும் என்று நான் கேட்பேனா? இப்பணியைச் செய்யத்தான் நான் இவ்வுலகத்திற்கு வந்தேன். பிதாவே உமது நாமத்தை மகிமைப்படுத்தும்" என்பதே. சுய வெறுப்புக்கு இதைவிடச் சிறந்த எடுத்துக் காட்டு வேறொன்றுமில்லை. (இப்பகுதி கார்டினர் ஸ்ப்ரிங்ஸ்ஸின் ஆங்கில மூலத்தைத் தழுவி ஈ. ஜே. ஆப்பில்பி தமிழில் எழுதிய 'கிறிஸ்தவன் யார்' என்ற நூலில் இருந்து எடுக்கப்பட்டது. இந்நூல் பற்றிய விமர்சனத்தை முன்னைய இதழில் தந்துள்ளோம்.)

# வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாடுகள்




*கிறிஸ்தவர்கள் சீர்திருத்தவாத காலத்திலிருந்தே 'திருமறைக்கல்வி' என்று அழைக்கப்படுகின்ற வினாவிடை முறையிலமைந்த கிறிஸ்தவக் கோட்பாட்டுப் பாடமுறையை அறிந்திருந்தனர். மார்ட்டின் லூதர் 1529-ல் இரண்டு திருமறைக்கல்விப் பாடநூல்களை எழுதினார். 1541-ல் ஜோன் கல்வினின் திருமறைக்கல்விப் பாடநூல் ஜெனீவா சபையில் பயன்படுத்தப்பட்டது. 1563-ல் வெளியிடப்பட்ட 'ஹெயிடில்பர்க் திருமறைக்கல்வி நூல்' அதுவரை வெளியிடப்பட்டவற்றில் சிறந்தொன்றாக விளங்கியது. 1647-ல் 'வெஸ்ட்மினிஸ்டர் அசெம்பிளி' தனது விசுவாச அறிக்கையை மட்டுமன்றி, அதன் சாராம்சத்தையும் 'சுருக்கமான திருமறைக்கல்வி' நூலாகவும் வெளியிட்டது. ரிச்சர்ட் பெக்ஸ்டர், மத்தியூ ஹென்றி போன்ற கிறிஸ்தவ அறிஞர்கள் தங்கள் சபை மக்களுக்கு திருமறைக்கல்வி மூலமாக கிறிஸ்தவப் போதனையை உணவாக ஊட்டி வளர்த்தனர். பாப்திஸ்துகள் மத்தியில் இதனைப் பயன்படுத்தியவர்களில் பென்ஜமின் கீச், ஜோன் பன்யன், சி. எச். ஸ்பர்ஜன் ஆகியோர் முக்கியமானவர்கள். ஸ்பர்ஜன் 1889-ல் திருமறையின் போதனைகளைத் தன்சபை மக்கள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியத்தை உணர்ந்து '1689 பாப்திஸ்து விசுவாச அறிக்கையை' மறுபடியும் வெளியிட்டதோடு, திருமறைக்கல்வி நூல் ஒன்றையும் வெளியிட்டார். இதனையே இங்கு தமிழில் விளக்கக் குறிப்புகளுடன் வழங்குகிறோம்.*

*கேள்வி 27: கிறிஸ்து அரசராக எவ்வாறு பணி புரிகிறார்?*

*பதில்: கிறிஸ்து எம்மைத் தம் கீழ் கொண்டுவருவதன் மூலமும், எம்மை ஆண்டு பாதுகாப்பதன் மூலமும், அவரதும் எமதுமான எதிரிகளை அடக்கி வெற்றி கொள்வதன் மூலமும் அரசராகப் பணி புரிகிறார்.*

*(சங்கீதம் 110:2-3; ஏசாயா 33:22; 1 கொரிந்தியர் 15:25)*

**விளக்கக்குறிப்பு:** ஒரு பேரரசின் அரசராக இயேசு கிறிஸ்து இருக்கிறார் என்ற திருமறை போதிக்கும் பேருண்மையை இவ்வினாவிடை விளக்குகின்றது. கிறிஸ்து சிலுவையிலே அறையப்பட்டபோது 'இவன் யூதருடைய ராஜாவாகிய இயேசு' (மத்தேயு 27:37; மாற்கு 15:26; லூக்கா 23:38; யோவான் 19:19) என்ற வார்த்தைகள் அச்சிலுவையில் பொறிக்கப்பட்டிருந்தன. துர்க்குணம் உடையவர்கள் இதைப்பயன்படுத்தி கிறிஸ்துவை அவமதிக்க முனைந்தபோதும் இவ்வுண்மையை இவ்விதமாக வெளிப்படுத்துவதும் கடவுளின் திட்டமாகவிருந்தது. சங்கீதக்காரன் 2 ஆம் சங்கீதத்தில் இதனையே முன்னுரைக்கிறான். பேதுரு அப்போஸ். 4:25 இல் இதையே உறுதிப்படுத்துகிறான். சிலுவையில் இறந்து கொண்டிருந்த கள்வனும் இயேசுவை நோக்கி, 'ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும்' என்று இதனையே குறிப்பிட்டுக் கூறினான். இயேசு அவனுக்கு பதிலளிக்குமுகமாக அவனை நோக்கி, 'இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்கிறேன் என்றார்.' (லூக்கா 23:42, 43) ஆகவே, கிறிஸ்து ஒரு பேரரசிற்கு அரசராக உள்ளார் என்ற உண்மையை ஆராய்வோம்.

முதலாவதாக, கிறிஸ்துவின் அரசாட்சி என்பது நிகழ்கால ஆவிக்குரிய நடவடிக்கை என்பதை நாம் உணர்தல் வேண்டும். இதனை மேலும் விளங்கிக் கொள்ள வேண்டுமானால் இவ்வினாவிடையின் போதனையை நாம் 'டிஸ்பென்சேஷனலிசம்' (Dispensationalism) என்ற நவீனமானதும், தவறானதுமான போதனையோடு ஒப்பிட்டுப் பார்த்தல் அவசியமாகிறது. இப்போதனையைப் பின்பற்றுபவர்களில் பலரும் திருமறையின் அடிப்படைப் போதனைகளில் நம்பிக்கை கொண்டவர்களே. இருந்தபோதும் வேதத்தை விளக்கும் முறையைப் பொறுத்தவரை இவர்கள் ஒரு செயற்கையான, தவறான விளக்க முறையைப் பயன்படுத்துகின்றனர். 'டின்பென்சேஷனலிசம்' வேத வரலாற்றை வெவ்வேறு காலக்கூறுகளாகப் (dispensations or periods) பிரித்து இக்காலகட்டங்களில் கடவுள் மனிதனோடு வெவ்வேறுவிதங்களில் தொடர்பு கொண்டு செயற்பட்டார் எனப் போதிக்கின்றது. உதாரணமாக மோசேயின் காலத்தில் கடவுள் மனிதரோடு நியாப்பிரமாணத்தின் மூலமாகத் தொடர்பு கொண்டார் எனவும், இப்போதோ கிருபையின் மூலமாகத் தொடர்பு கொள்கிறார் எனவும், இப்போதனை விளக்குகின்றது. ஆனால் உண்மையில் கடவுள் எப்போதுமே நியாயப்பிரமாணத்தைக் கொண்டிருந்து அதை வலியுறுத்தியதோடு மனிதன் பாவத்தில் வீழ்ந்த நாள் முதல் அவன் இரட்சிப்பை அடையக்கூடிய ஒரே வழியாக கிருபையையே கடைப்பிடித்து வருகிறார்.

'டிஸ்பென்சேஷனலிச'த்தின்படி கிறிஸ்து இன்னும் அரசராகவில்லை. இப்போதனை, கிறிஸ்து ஆரம்பத்தில் யூதர்களின் அரசராக வந்தபோது அவர்கள் அவரை நிராகரித்து விட்டதால், அவர் தனது இராஜ்யத்தை ஏற்படுத்துவதைத் தாமதித்துள்ளார் என்று விளக்குகின்றது. இந்த இடைக்காலத்தில் கடவுள் மனிதர்களை சபையின் மூலமாக இரட்சித்துக் கொண்டிருக்கிறார் என்றும், ஆனால் கிறிஸ்து மீண்டும் வருகிறபோது, அவர் தனது இராஜ்யத்தை இவ்வுலகில் ஏற்படுத்தி ஆயிரம் வருடங்கள் பூரணமான ஆட்சியை ஏற்படுத்துவார் என்றும் இக்கோட்பாடு விளக்குகின்றது.

திருமறையோ இப்போதனைக்கு எதிரான கருத்தைத்தான் தெரிவிக்கின்றது. (1) கிறிஸ்துவின் இராஜ்யம் ஏற்கனவே இவ்வுலகில் நிலவுகின்றது. இதனையே பவுல் கிறிஸ்து, 'இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய *இராஜ்யத்திற்கு'* நம்மை உட்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கிறார் (கொலோசேயர் 1:13) (2) கிறிஸ்துவின் இராஜ்யம் கண்ணால் காணமுடியாத ஆவிக்குரிய இராஜ்யமாயிருக்கிறது. இயேசு சொன்னார், 'என் இராஜ்யம் இவ்வுலகத்திற்குரியதல்ல' (யோவான் 18:36), அத்தோடு, 'தேவனுடைய இராஜ்யம் பிரத்தியட்சமாய் வராது' (லூக்கா 17:20) என்றும் கூறினார். (3) கிறிஸ்துவின் இராஜ்யம் எப்போதுமே முடிவுக்கு வராது (தானியேல் 2:44; 2 பேதுரு 1:11) என்றாலும், உலக முடிவில் பூரணமான ஒரு நிலைமை ஏற்படுவதற்கு இது இடம் கொடுக்கும் (1 கொரி. 15:24). கிறிஸ்துவின் இராஜ்யம் இப்போது விஸ்தரிக்கப்படுகிறது. உலக முடிவில் அது பூரணத்துவம் பெறும். ஆகவே 'டிஸ்பென்சேஷனலிசத்தின்' அடிப்படைத் தவறே கிறிஸ்துவின் இராஜ்யத்தை, அவரது சபையிலிருந்து பிரிப்பதாகும்.

இரண்டாவதாக, கிறிஸ்துவின் இராஜ்யமே சபையாகாது. இது ரோமன் கத்தோலிக்கர்கள் விடும் தவறாகும். இவர்களது கருத்துப்படி ரோமன் கத்தோலிக்க சபையே இவ்வுலகில் தேவ ராஜ்யமாயிருக்கிறது.

இதனால்தான் ரோமன் கத்தோலிக்க சபை உலகில் உள்ள அனைத்து மக்களையும், நிறுவனங்களையும் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர முயற்சி செய்கிறது. இவ்விதமாகவே கிறிஸ்து போப்பின் மூலமாக உலகில் தனது அதிகாரத்தைச் செலுத்துகிறார் என்பது ரோமன் கத்தோலிக்க சபைப் போதனை.

இவற்றிற்கெல்லாம் மாறாக சீர்திருத்தவாதம் போதிப்பதென்ன? கிறிஸ்துவின் இராஜ்யமும், சபையும் ஒன்றுக்கொன்று நெருங்கிய, ஆழ்ந்த தொடர்புள்ளதாக இருந்தபோதும், இரண்டும் ஒன்றையே குறிப்பதாகக் கொள்ளக்கூடாது. அதேவேளை திருமறை இவ்விரு வார்த்தைகளையும் சில வேளைகளில் மாறி மாறிப் பயன்படுத்தியிருப்பதையும் அவதானிக்கலாம். கிறிஸ்துவே சபையின் அரசராகவும், தலைவராகவும் உள்ளார். ஆனால் அவர் தனது சபையையும் உள்ளடக்கிய ஒரு பரந்த இராஜ்யத்தை ஆளுகிறவராயிருக்கிறார்.

சீர்திருத்தப் போதனையின்படி கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கும், சபைக்குமுள்ள ஒற்றுமைகளையும், வேறுபாடுகளையும் பின்வருமாறு விளக்கலாம்:


***ஒற்றுமைகள்:***

1. இரண்டிற்கும் கிறிஸ்துவே தலைவராக இருக்கிறார்.
2. மெய்யான கிறிஸ்தவர்கள் மட்டுமே இரண்டிலும் அங்கத்தவர்களாக இருக்க முடியும்.
3. ஒன்றில் அங்கத்தவராக இல்லாமல் மற்றதில் ஒருவர் அங்கத்தவராக இருக்க முடியாது.

***வேறுபாடுகள்:***

1. சபைகள் கண்களால் காணக்கூடியதாக இருப்பதுபோல் கிறிஸ்துவின் இராஜ்யம் நம் கண்களுக்குப் புலப்படாது.
2. இராஜ்யத்திற்கான திறவுகோள்களை (பிரசங்கத்தின் மூலமும், சபை ஒழுங்குக் கட்டுப்பாடு மூலமும் ஒருவரை இராஜ்யத்திற்குள் அனுமதிக்கவும், வெளியேற்றவும்) திருச்சபை கொண்டிருப்பதுபோல் (மத்தேயு 16:19) சபைக்குள் எவரையும் அனுமதிப்பதற்கு கிறிஸ்துவின் இராஜ்யத்திற்குத் திறவுகோள்கள் இல்லை.

இன்று கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கும், திருச்சபைக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லாததுபோல் பலர் நடந்து வருகிறார்கள். முக்கியமாக திருச்சபையில் அங்கத்தவராக இருந்து வேத பூர்வமாக தேவ சேவையில் ஈடுபடாது சபைக்கு வெளியில் இருந்து காரியம் பார்க்க முனைவதற்கு இக்கோட்பாட்டை விளங்கிக் கொள்ளாததும் ஒரு காரணமாகும். சபைக்கு வெளியிலும் கிறிஸ்துவின் இராஜ்யம் பரந்துள்ளது என்ற போதனையைத் தவறாகப் புரிந்து கொண்டு சபையைத் துறந்து நிறுவனங்கள் அமைத்து, அல்லது நிறுவனங்களில் சேர்ந்து பலர் தேவ சேவையில் ஈடுபட முனைகிறார்கள். 'டிஸ்பென்சேஷனலிசத்தின்' ஒரு போதனை கிறிஸ்து இன்று சபைக்கு முழுக்குப் போட்டு விட்டு கிறிஸ்தவ நிறுவனங்களின் மூலம் மக்களை இரட்சிக்கும் காரியத்தில் ஈடுபட்டிருக்கிறார் என்பதாகும். ஆனால் கிறிஸ்து தான் நேசிக்கும் சபையை இன்னும் விவாகரத்துச் செய்துவிடவில்லை. அத்தோடு கிறிஸ்துவின் இராஜ்யம் பிரிக்க முடியாதளவுக்கு அவரது சபையோடு இணைந்திருப்பதால் அதனைப் பிரிக்க முனைபவர்கள் வேதம் புரியாதவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் இராஜ்யத்திற்காகப் பாடுபடுகின்ற, ஜெபிக்கின்ற, எவரும் அவரது சபைக்காகப் பாடுபடவும் ஜெபிக்கவும் வேண்டும். கிறிஸ்துவின் இராஜ்யத்தை நேசிக்கும் எவரும் அவரது சபையை நேசிக்க வேண்டும். ஏனெனில் ஒன்று வளர்கிற போதே மற்றதும் வளர்கிறது. ஒன்று பாதிக்கப்பட்டால் மற்றதும் பாதிக்கப்படும்.




டிஸ்பென்சேஷனலிசம் | ரோமன் கத்தோலிக்கசபை | சீர்திருத்தவாதம்

கிறிஸ்து அரசாரக பணிபுரிவது மட்டுமல்ல 'அவர் தமதும், எமதுமான எதிரிகளை அடக்கி வெற்றி கொள்ளவும் செய்கிறார்' என்று இவ்வினாவிடை போதிக்கின்றது. ஆகவே இயற்கையாகவே அவரது இராஜ்யத்தின் எதிர்காலத்தைப் பற்றிய கேள்வி எழுகின்றது. அதாவது 'அனைத்து எதிரிகளும் அவரது காலடியில் வருவது' எப்போது? (1 கொரி. 15:25).

| பிரீ-மிலேனியலிசம் (Pre-Millennialism) ஆயிரம் வருட கால ஆட்சிக்குமுன் கிறிஸ்துவின் வருகை | போஸ்ட்-மிலேனியலிசம் (Post-Millennialism) ஆயிரம் வருட கால ஆட்சிக்குப்பின் கிறிஸ்துவின் வருகை | அ-மிலேனியலிசம் (A-Millennialism) ஆயிரம் வருட கால ஆட்சியை உருவகமாகக் (Symbolic) கருதுகிறது |
|---|---|---|

பிரி-மிலேனியலிஸக் கோட்பாட்டைப் பின்பற்றுபவர்கள், கிறிஸ்து மீண்டும் வரும்போது விசுவாசிகளை உயிர்த்தெழச் செய்து இவ்வுலகில் ஆயிரம் வருட கால நல்லாட்சியை ஏற்படுத்துவார் என்று நம்புகிறார்கள். இதற்குப் பின்பே, அவிசுவாசிகளின் உயிர்த்தெழுதலும், நியாயத் தீர்ப்பு நாளும், அதன்பின் நித்திய காலமும் ஏற்படும் என்பது இவர்களின் போதனை. இப்போதனையை திருமறை பூர்வமானதாக நம்மால் ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கின்றது.

ஆனால், போஸ்ட்-மிலேனியலிசக் கோட்பாட்டைப் பின்பற்றுபவர்கள், இவ்வுலக முழுவதும் நற்செய்தி பரப்பப்படும்வரை கிறிஸ்து கண்ணுக்குத் தெரியாத தனது நிகழ்கால ஆன்மீக இராஜ்யத்தைத் தொடர்ந்து நடத்துவார் என்று கருதுகிறார்கள். இதன்பின் ஆயிரவருட காலத்திற்கு உலகில் நீதியும் சமாதானமும் நிகழும் எனவும், அதன்பிறகே கிறிஸ்து மறுபடியும் வருகை தந்து, மரித்தவர்களை உயிர்த்தெழச் செய்து, உலகத்தை நியாயந் தீர்த்து, நித்திய காலத்தை ஏற்படுத்துவார் என்றும் எதிர்பார்க்கிறார்கள்.

திருமறையில் கூறப்படும் ஆயிரம் வருட கால ஆட்சியை உருவகமாகக் கருதும் அ-மிலேனியலிசக் கோட்பாட்டைப் பின்பற்றுபவர்களோ நியாயத்தீர்ப்பு நாள்வரை உலகில் நல்லதும், தீயதும் கலந்தே வளரும் எனவும், எந்தவித முன்னறிவிப்பும் கொடாது கிறிஸ்து ஒருநாள் மறுபடியும் வருகை தந்து மரித்தோரை உயிர்த்தெழச் செய்து நியாயந் தீர்ப்பார் என்று போதிக்கிறார்கள். இதன்பின்பே நித்தியகாலம் ஏற்படும் என்பது இவர்கள் கருத்து.

**"இத் திருமறைக் கல்வியை வேதபாட வகுப்புகளிலோ, ஞாயிறு பாடசாலைகளிலோ முறையாகப் போதிப்பது சபைமக்கள் ஆவிக்குரிய வாழ்வுக்கான வேத அறிவு பெற்று வளரத் துணைபுரிவதாக அமையும்."**

இம்மூன்றிலும் இறுதியாக நாம் பார்த்த அ-மிலேனியலிசக் கோட்பாடே திருமறை பூர்வமானதாக அமைவதாக நாம் கருதுகிறோம். ஏனெனில்:

1. கிறிஸ்து மறுபடியும் எப்போது வருவார் என்று ஒருவருக்குமே தெரியாதென திருமறை போதிக்கின்றது (அப். 1:7; மத்தேயு 24:36; 1 தீமோ.5:1). ஆயிரம் வருட கால ஆட்சிக்குப்பின் கிறிஸ்து வருவார் என்பதை மனிதர்கள் அறிந்திருந்தால் இது உண்மையாக இருக்க முடியாது. 2. நிகழ்காலத்தையே திருமறை இறுதி நாட்களாகக் கருதுகிறது (எபிரே. 1:2; யோவான் 6:39; 11:24; 12:48; அப். 2:17; 2 தீமோ. 3:1). இது உண்மையானால் கிறிஸ்துவின் வருகையின்பின்பு ஆயிரம் வருட ஆட்சி காலத்தை நாம் எதிர்பார்க்க முடியாது. 3. மத்தேயு 13 ஆம் அதிகாரத்தில் இயேசு போதிக்கும் 'விதைகளும், களைகளும்' உவமையில், அறுவடை நாள் வரையில் அவை இரண்டும் சேர்ந்தே வளரும் என்று பார்க்கிறோம். ஆகவே கிறிஸ்துவின் வருகைக்கு முன்பு பூரணமான நீதியும் சமாதானமும் உலகில் நிலவும் என்ற கருத்து இதற்கு முரணாகக் காணப்படுகின்றது.

**'கிருபையின் போதனைகள்' தொடர் கட்டுரை இடமின்மையால் இவ்விதழில் இடம் பெறவில்லை. அடுத்த இதழில் அது தொடர்ந்து வெளி வரும்.**

# பரிசுத்த ஆவியானவரை துக்கப்படுத்தாதிருத்தல் எவ்வாறு?

ஆக்டேவியஸ் வின்ஸ்லோ

விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்தினால் அவர்களது உள்ளான ஆவிக்குரிய வாழ்வு பெலவீனப்படும் என்று இவ்வத்தியாயத்தில் கற்றுக் கொள்கிறோம். அவர் என்ன சொல்லுகிறார் என்பதில் அக்கறை கொள்ளாததினாலும், மற்றும் தங்களது வாழ்க்கையில் அவரது கிரியைகளைப் புறக்கணிப்பதின் மூலமும் ஆவியானவரைத் துக்கப்படுத்த முடியும்.

கிறிஸ்தவர்கள் தங்களது வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் கிரியையை மகிமைப்படுத்த வேண்டும். அவரையல்லாமல் மனந்திரும்புதலைக் குறித்தோ, இயேசு கிறிஸ்துவை விசுவாசிப்பதைக் குறித்தோ, வேதத்தைப் புரிந்து கொள்வதைக் குறித்தோ, ஜெபிப்பதைக் குறித்தோ, கடவுளுக்குப் பிரியமாக வாழ்வதைக் குறித்தோ கிறிஸ்தவர்கள் ஒன்றுமே தெரிந்து கொள்ள முடியாது.

"பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துவது" என்பதன் அர்த்தம் என்ன? கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்த முடியும் என்று கடவுள் சொல்லும்போது, தங்களது வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவரின் கிரியையை ஒருவர் அலட்சியம் செய்வதை அவர் அதிக விழிப்போடும் உணர்வோடும் கவனிக்கிறார் என்பதே பொருளாகும். ஆவியானவர் தாம் அலட்சியப்படுத்தப்படுவதை அறிந்ததும் தமது கிரியையையும், ஆசீர்வாதத்தையும் நிறுத்திக் கொள்கிறார். கீழ்க்கண்ட வழிகளில் விசுவாசிகள் அவரைத் துக்கப்படுத்த முடியும். அவர் விசுவாசிகளுக்குக் கொடுத்திருக்கிற புதிய ஆவிக்குரிய ஜீவன் அதன் வல்லமையை இழக்கும் போது ஆவியானவர் துக்கப்படுத்தப்படலாம்.. அப்போது நன்றாக ஓடின விசுவாசிகள் (கலா. 5:17) தங்களது ஆவிக்குரிய வாழ்வில் சோர்வடைந்து அக்கறையில்லாமல் காணப்படுவார்கள். கடவுளோடுள்ள உறவில் குளிருமின்றி அனலுமின்றிக் காணப்படுவார்கள் (வெளி. 3:16).. பரிசுத்த ஆவியானவர் செய்த எல்லாக் காரியங்களுக்காகவும் நாம் நன்றியற்றவர்களாய் இருக்கும்போது பரிசுத்த ஆவியானவர் நமது சந்தோசத்தையும் சமாதானத்தையும் அகற்றி விடுகிறார்.

முதலாவதாக, தங்களுடைய வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்திருக்கிறார் என்பதை மறுதலிக்கும்போது கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஆவியானவரைத் துக்கப்படுத்துகிறார்கள். மகா பாவமுள்ளவர்கள் என்ற உணர்ச்சி அவர்களில் இருப்பதால் சில வேளைகளில் தாங்கள் விசுவாசிகளல்ல என்று அவர்கள் சிந்திக்கத் தொடங்கலாம். ஆனால் அது மெய்யான தாழ்மையாக இருக்கலாம். அதற்காக, எங்களது வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்ததே கிடையாது என்று கூறி விசுவாசிகள் ஆவியானவரைத் துக்கப்படுத்தக் கூடாது. தாம் பாவிகள் என்றும், தங்களுடைய ஆவிக்குரிய வாழ்வு தற்சமயம் ஆரோக்கியமாக இல்லை என்றும் உணர்கிறவர்களில் பரிசுத்த ஆவியானவர் நிச்சயமாகவே கிரியை செய்திருப்பார். ஏனெனில் ஆவியானவரைக் கொண்டிராதவனுக்கு பாவத்தைப் பற்றிய மன வருத்தம் ஒருபோதுமே இருக்காது.


**இயேசு கிறிஸ்து தங்களுக்குச் செய்திருப்பதைவிட பரிசுத்த ஆவியானவர் அதிகமாகச் செய்திருக்கிறார் என்று விசுவாசிகள் எண்ணும்போது பரிசுத்த ஆவியானவர் துக்கப் படுத்தப்படுகிறார்.**

இரண்டாவதாக, இயேசு கிறிஸ்து தங்களுக்குச் செய்திருப்பதைவிட பரிசுத்த ஆவியானவர் அதிகமாகச் செய்திருக்கிறார் என்று விசுவாசிகள் எண்ணும்போது பரிசுத்த ஆவியானவர் துக்கப்படுத்தப்படுகிறார். பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தைத் தமது மக்களுக்குக் காட்டுவார் என்று இயேசு கிறிஸ்துவே சொல்லியிருக்கிறார் (யோவான் 15:26; 16:14). பரிசுத்த ஆவியானவரது பணி இயேசுவை மகிமைப்படுத்துவதாகும். ஏனெனில் இயேசுவின் இரட்சிப்பின் கிரியை மூலமாகவே விசுவாசிகள் கடவுளால் ஏற்றுக் கொள்ளப்படுகிறார்கள். இயேசுவானவரே பாவிகளுக்காக கடவுளின் நியாயப் பிமாணத்துக்குக் கீழ்ப்படிந்தார். கடவுளது நீதியின் கோரிக்கையான தண்டனையை நிறைவேற்றும்படியே இயேசு பாவிகளுக்காக மரித்தார். அவர்களது பாவத்தின் கிரயத்தைப் பரிசுத்த ஆவியானவர் செலுத்தவில்லை. இயேசு தாமே செலுத்தினார். இயேசுவானவர் என்ன செய்திருக்கிறார் என்று காட்டுவதும், அதைப் பெற்றுக்கொள்ளும் நிலைக்கு அவர்களைக் கொண்டுவருவதுமே பரிசுத்த ஆவியானவரின் பணியாகும். அவர்களுக்காக பரிசுத்த ஆவியானவர் கடவுளோடு சமாதானம் பண்ணுகிறதில்லை. இயேசுவானவரே தமது மரணத்தின் மூலம் அவர்களுக்காக சமாதானம் பண்ணினார். இந்தச் சமாதானத்தை அனுபவிக்கும்படியாக அவர்களைக் கொண்டு நடத்துவதே பரிசுத்த ஆவியானவரின் பணியாகும்.

மூன்றாவதாக, விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் கிரியையைக் குறைத்து மதிப்பிடுவதன் மூலம் அவரைத் துக்கப்படுத்தலாம். விசுவாசிகள் தொடர்ந்து பாவம் செய்யாது கடவுளுக்குக் கீழ்ப்படியும்படி, அவர்களை வழி நடத்துவதற்காகவே பரிசுத்த ஆவியானவர் அவர்களில் வாசம் செய்கிறார். அவர் சொல்லுகிறபடி அவர்கள் செய்யாவிட்டால் எவ்வளவாய் அவர்கள் அவரைத் துக்கப்படுத்துகிறார்கள்!

*('கிறிஸ்தவனின் உள்ளான வாழ்க்கை' என்ற நூலின் இப்பகுதி, விளக்கத்திற்காக தமிழ் வழக்கில் சில மாற்றங்களுடன் தரப்பட்டுள்ளது.)*

# வில்லியம் கேரி



**‘கர்த்தரிடமிருந்து பெருங்காரியங்களை எதிர் பாருங்கள்; கர்த்தருக்காகப் பெருஞ்சாதனைகளைச் செய்யுங்கள்’ என்று கூறி, வாழ்நாளெல்லாம் கர்த்தருக்கே மகோன்னதமாக சேவை செய்தவரும், நவீனகால அருட்பணி ஊழியத்திற்கு அடிக்கல் நாட்டியவருமான வில்லியம் கேரியின் வாழ்க்கைச் சரிதம்.**

## *கேரியின் இறவாப் பிரசங்கம்*

நொதம்டன் ‘பார்டிக்குயலர்’ பாப்திஸ்து அசோசியேசன் கூட்டம் 1792 ஆம் ஆண்டு நொட்டிங்கம் என்ற இடத்தில் நடந்தது. இக்கூட்டத்தில் இருபத்தி நான்கு சபைகளைச் சேர்ந்த பதினேழு போதகர்கள் பங்குபற்றினர். கூட்டம் நடைபெற்ற இடத்தை அறுபது எழுபது மைல்கள் குதிரைப் பயணத்தின் மூலம் அடைய வேண்டியிருந்ததால் பலர் கூட்டத்தில் பங்கு கொள்ளும் எண்ணத்தைக் கைவிட்டனர். நகரத்தின் பாப்திஸ்து சபையில் இக்கூட்டம் நடந்தது. இருநூற்றி முப்பது பேர் மட்டுமே அமரக்கூடியதாக கட்டிட வசதி இருந்தது. செவ்வாய்க்கிழமை வழமையான கூட்டத்தின் ஆரம்ப நிகழ்ச்சிகள் நடைபெற்றன. அசோசியேசனைச் சேர்ந்த அங்கத்துவ சபைகளின் கடிதங்கள் அன்று வாசிக்கப்பட்டன. வாசிக்கப்பட்ட கடிதங்கள் கர்த்தர், அவர்கள் சபைகள் மத்தியில் செய்து வரும் காரியங்களை விளக்கின.

அடுத்த நாள் புதன்கிழமை காலை ஆறு மணிக்கு அனைவரும் ஜெபத்திற்காகக் கூடினர். அன்றைய தினம் பத்து மணிக்கு முலாவது பிரசங்கம் நடக்க விருந்தது. அதைக் கொடுக்க வேண்டியவரோ வில்லியம் கேரி. அவர் பேச எடுத்துக் கொண்ட வேதப்பகுதி ஏசாயா **54**. அவ்வேதப் பகுதியை பலமுறை எபிரேய மொழியில் வாசித்திருந்த கேரிக்கு அது மனப்பாடமாகவிருந்தது. மூல மொழியில் இருந்த அத்தனை அழகையும் ஆங்கிலத்தில் கொண்டு வர முடியவில்லையே என்ற ஆதங்கமும் கேரிக்கு இருந்தது. அவ்வேதப் பகுதியில் பிரதிபலித்த ஏசாயாவின் விசுவாசச்சுடர் கேரியின் உள்ளத்தில் அன்று பற்றி எறிந்து கொண்டிருந்தது.

கேரி பிரசங்கத்தை வழமை போல எடுத்துக் கொண்ட வேதப் பகுதியின் வரலாற்று முக்கியத்துவத்தை விளக்கி ஆரம்பித்தார். அவ்வேதப்பகுதி விபரித்த கைம் பெண்ணாகிய இஸ்ரவேல் கேரிக்கு அவரது காலத்து திருச்சபையைக் கண்ணாடி போல் படம் பிடித்துக் காட்டியது. இஸ்ரவேலைப் போல் தோல்வியில் துவண்டு மகிமையும், வலிமையும் இழந்து வாடி நின்றது கேரியின் காலத்து திருச்சபை. சபையின் நிலமையைக் கேரி பல இடங்களில் அவதானித்திருந்தார். அன்றைய ஆங்கிலிக்கன் சபையின் உயிரற்ற தன்மையையும் கேரி உணர்ந்திருந்தார். இதற்கு விதிவிலக்காக ஜோன் நியூட்டனுடையதும், தொமஸ் ஸ்கொட்டினதும் பிரசங்கங்கள் மட்டுமே அமைந்திருந்தன.

அதற்கு மாறாக ஆங்கிலிக்கன் சபையோடு ஒத்துழைக்க மறுத்தவர்



கள் மத்தியில் அவசியமற்ற வாக்கு வாதங்களே இருந்தனவேயன்றி, புத்துணர்ச்சியோ, எதிர்காலத்தைப் பற்றிய எந்தவிதத் தெளிவோ காணப்படவில்லை என்பதையும் கேரி அறிந்திருந்தார். பல இடங்களில் பாப்திஸ்து சபைகளும் பலவீனமான நிலமையிலேயே இருந்தன. லெஸ்டரில் இருந்த பாப்திஸ்து சபையொன்றில் குடிகாரப் போதகரும், உதவியாளர்களும் கும்மாளமிட்டுக் கொண்டிருந்ததையும் கேரி அறிந்திருந்தார். இவற்றைக் கண்டும் காணாமலும் கேரியால் இருந்துவிட முடியவில்லை. மாறாக சபையில் காணப்படும் பாவங்களை அவர் சாடினார். இஸ்ரவேலைப் போலவே திருச்சபையும் கடவுளைத் தூக்கியெறிந்துவிட்டு கண்ணிழந்து நிற்பதை கேரி துக்கத்தோடு ஆனால் சாந்தமாக எடுத்துக் காட்டினார். ரைலன்ட் கேரியின் அன்றைய பிரசங்கத்தை வர்ணிக்கும் போது, ‘இஸ்ரவேலின் குழந்தைகளைப் போல அன்றைய தினம் மக்கள் கேரியின் பிரசங்கத்தைக் கேட்டுப் பெருங்குரலெடுத்துக் கதறி அழுதனர்’ என்று கூறுகின்றார்.

இவற்றையெல்லாம் கேரி எடுத்துக் காட்டியதற்குக் காரணம் தாம் செய்துவரும் பாவங்களில் இருந்து அவர்கள் மனந்திரும்ப வேண்டுமென்பதற்காக மட்டுமல்ல, அத்தோடு காத்திருக்கும் இனிய வருங்காலத்தைக் குறித்து அவர்களை சிந்திக்க வைக்க வேண்டுமென்பதற்காகவும்தான். கெப்டன் குக்கின் கண்டுபிடிப்புகள், பிரெஞ்சுப் புரட்சி, அடிமை வியாபாரத்திற்கெதிரான போராட்டம் என்பவையெல்லாம் சுபீட்சமான எதிர்காலத்தை எடுத்துக் காட்டுகின்றன என்று கேரி ஏற்கனவே தனது ‘விசாரணை’யில் தெரிவித்திருந்தார்.

தனது செய்தியில் கேரி இரண்டு காரியங்களை மீண்டும் மீண்டும் வலியுறுத்தினார். ‘கர்த்தரிடமிருந்து பெருங் காரியங்களை எதிர்பாருங்கள்; கர்த்தருக்காகப் பெருஞ்சாதனைகளைச் செய்யுங்கள்’ என்ற வாசகங்கள் புயலாக கேட்போர் செவி மடல்களைத் தாக்கின. கூட்ட இறுதியில் சில நல்ல காரியங்களுக்காகவும், பக்கத்து நகரங்களுக்கு நற்செய்தி சொல்லவும் பணம் சேர்க்கப்பட்டது. ஆனால் ரைலன்ட் இவற்றோடு கூட்டத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்ததை கேரியால் நம்பவோ, தாங்கிக் கொள்ளவோ முடியவில்லை. அவர் புளரின் கரங்களைப்பற்றி ‘வேறு நாடுகளுக்கு நற்செய்தி கூறுவது குறித்து எதுவுமே செய்யாமல் மறுபடியும் நாம் கூட்டத்தை முடிப்பதா’ என்று மனங்கலங்கிக் கேட்டார்.

புளரும், ரைலன்டும், சட்கிளிப்பும் வில்லியம் கேரியை இனிமேல் எவ்விதத்திலும் தடுக்க முடியாது என்பதைத் தெளிவாக உணர்ந்தனர். (வளரும்)




புத்தக விமர்சனம் . . புத்தக விமர்சனம் . . புத்தக விமர்சனம் . . புத்தக விமர்சனம்

# பிறவி அடிமைகள்

## எழுதியவர்: மார்டின் லூதர்

தமிழாக்கம்: ஆர். ஜே. சி. பென்னட்
வெளியீட்டாளர்: கிறேஸ் பாப்திஸ்து வெளியீடுகள்
கிடைக்குமிடம்: தமிழ் பாப்திஸ்து வெளியீடுகள்
4. கெல்லீஸ் ரோடு, கீழ்பாக்கம், சென்னை 600 010
விலை: 9.00 (இந்திய ரூபாய்)

இந்நூலின் முக்கியத்துவத்தைப் பற்றி முன்னொருமுறை இப்பத்திரிகையில் சுருக்கமாகக் குறிப்பிட்டிருந்தோம். இதுபற்றி விளக்கமாக எழுத வேண்டிய அவசியத்தை இன்றைய சூழ்நிலை ஏற்படுத்தியுள்ளது. கடவுளின் துணையோடு மனிதன் தன்னை இரட்சித்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் அநேகர் இன்று ஊழியத்தில் ஈடுபட்டுள்ளார்கள். அவ்வாறு மனிதன் தன்னை இரட்சித்துக் கொள்ளத் துணை புரியும் சாதனமாகவே Altar Call என்றழைக்கப்படும் 'கரங்களைத் தூக்கி ஆண்டவரை ஏற்றுக் கொள்ளும்' அல்லது கூட்டங்களில் நற்செய்தியாளரின் அழைப்பை ஏற்றுக் கடவுளிடம் தம்மை ஒப்புக் கொடுக்க முன்னால் வரும் முறைகள் இன்று பல நற்செய்தியாளர்களாலும், போதகர்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவற்றின் மூலம் மனிதன் நிச்சயமாக ஆண்டவரை அறிந்து கொண்டுவிடலாம் என்று பலர் நம்பும் வேளையில், மனிதன் கடவுளை அறிந்து கொள்ள இவை மட்டுமே போதாது என்றாலும் இவையில்லாமல் ஒருவன் கடவுளை அறிந்து கொள்ள முடியாது என்று நம்புபவர்களும் அநேகம். இத்தகைய நம்பிக்கைகளுக்குக் காரணமென்ன? இவை வேதபூர்வமானவையா? எந்த அடிப்படையில் நற்செய்தியாளர்கள், போதகர்கள் இன்று இவ்வழி முறைகளைக் கூட்டங்களில் பயன்படுத்துகிறார்கள்? என்று நாம் ஆராயத்தான் வேண்டும்.

இம்மாதிரியான வழி முறைகள் ஏற்படுவதற்கு மூலகாரணம் மனிதன் தன்னைத் தானே இரட்சித்துக் கொள்ளும் 'சுதந்திர சித்தத்தைக்' (Free will) கொண்டிருக்கிறான் என்ற நம்பிக்கையே. மனிதன் பாவத்தால் பாதிப்புறாத தனது 'சுதந்திர சித்தத்தைப்' பயன்படுத்தி கர்த்தரின் கிருபையைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் நற்செய்தியாளர்கள் கூட்டங்களில் கர்த்தருக்காகத் தீர்மானம் எடுக்கும்படி மக்களை வற்புறுத்துகிறார்கள். இதற்கெல்லாம் அவர்கள் கொண்டிருக்கும் வேத ஆதாரமற்ற தவறான நமபிக்கையே காரணம். இதைப் பற்றியே மார்டின் லூதர் இந்நூலில் விளக்குகிறார்.

கிரியைகளினால் வரும் இரட்சிப்பைப் பற்றிய ரோமன் கத்தோலிக்க சபையின் போதனைகளைக் கடுமையாக எதிர்த்த லூதர், கிரியைகளினால் தேவ கிருபையை மனிதன் அடையத் தடையாக இருக்கும் பாவம் அவனில் ஏற்படுத்தியுள்ள பாதிப்பை இந்நூலில் வேத பூர்வமாக விளக்குகிறார். 'மனித சித்தத்தின் அடிமைத்தனம்' (The Bondage of the Will) என்ற தலைப்பில் லூதர் எழுதிய இந்நூல் தமிழில் முதன்முறையாக 1992 இல் வெளி வந்தது. மனித இன நலக்கோட்பாட்டாதரவாளரும் (Humanist), சிறந்த அறிவியல் மேதையுமான இராஸ்மஸ் என்பவர், கத்தோலிக்க சபையின் வற்புறுத்தலுக்கு உட்பட்டு எழுதிய நூலுக்கு எதிராக இந்நூலை லூதர் வெளியிட்டார். இராஸ்மஸும், லூதரைப்போலவே கத்தோலிக்க சபைக்கு எதிராக அக்காலத்தில் போராடிய போதும் இவ்விடயத்தில் லூதரோடு ஒத்துப் போகவில்லை. லூதர், இராஸ்மஸின் கருத்துக்கள் சுவிசேஷ விசுவாசத்திற்கு எதிரானவை என்பதை இந்நூலின் மூலம் விளக்கினார். இதை விளக்கும் லூதர், "விருப்பச் சுதந்திரத்திற்கு (Free will) ஆதரவாக வாதிடுபவர்கள் கிறிஸ்துவை மறுதலிக்கிறார்கள் என்பதை உணர வேண்டும் என்று நான் விரும்புகிறேன். நம்முடைய விருப்பச் சுதந்திரத்தால் கிறிஸ்துவைப் பெறக் கூடுமானால் கிறிஸ்து நமக்குத் தேவையில்லையே. கிறிஸ்து நமக்கு இருந்தால் நமக்கு விருப்பச் சுதந்திரம் தேவையில்லை. விருப்பச் சுதந்திர ஆதரவாளர்கள் தங்கள் செயலினால் கிறிஸ்துவை மறுதலிக்கிறார்கள்." என்கிறார்.

மனிதனிடம் விருப்பச் சுதந்திரம் இருப்பதாக நம்பி நற்செய்தி கூறுபவர்கள், கிறிஸ்துவின் நற்செய்தியின் வல்லமையிலும், பெலத்திலும் நம்பிக்கை வைக்காது மனித இரட்சிப்புக்கு அவனது வல்லமையையே ஆதாரமாகக் கருதி அதை நம்பியிருக்கிறார்கள். இதைத்தான் இன்றைய வழக்கில் 'மனித இன நலக் கோட்பாடு' (Humanism) என்று கூறுகிறோம். இக் கோட்பாடு கர்த்தரின் இறைமையை ஏற்றுக்கொள்வதில்லை. தவறான போதனைகள், நம்பிக்கைகளிலிருந்து விடுபட இன்றே இந்நூலைப் பெற்று, வாசித்து, ஆராய்ந்து, வேத சத்தியத்தில் வளம் பெற்று கிறிஸ்துவைப் பின்பற்றும் விசுவாசத்தில் உறுதியடையுங்கள்.

# கேள்வி? - பதில்!



# 'ஒப்பீட்டு சமயப் போதனையும்', 'தத்துவக் கலந்துரையாடலும்'

❋ *மற்ற சமயங்களைப் படிப்பதும், பிறசமயத்தாருடன் தத்துவக் கலந்துரையாடலில் ஈடுபடுவதும் நன்மை பயக்கும் என்று கூறுகிறார்களே?*

❋ ஒளியின் தேவனாகத் தன்னைக் காட்டி மக்களை மயக்கும் செயலையே தொழிலாகக் கொண்டுள்ள சாத்தான் இன்று கிறிஸ்தவத்திற்கு எதிராகச் செய்யும் பல காரியங்களில் இரண்டுதான் 'ஒப்பீட்டு சமயப் போதனையும்' (Comperative religious studies), 'தத்துவக் கலந்துரையாடலும்'. இவை ஒருவிதத்தில் ஒன்றுக்கொன்று தொடர்புடையவை. அண்ணனும், தம்பியும்போல என்று கூடச் சொல்லலாம்.

அநேக வேதாகமப் பாடசாலைகளில் ஒப்பீட்டு சமயப் போதனை பாடத்திட்டத்தில் இன்று முக்கிய இடம் வகிக்கின்றது. பவுல் அப்போஸ்தலனைக் காரணம் காட்டி இதை நியாயப்படுத்துவார்கள் சிலர். அந்நிய மதங்களில் அறிவில்லாமல் இருந்திருந்தால் பவுலால் அத்தனியாவில் அற்புதமாகப் பிரசங்கித்திருக்க முடியுமா என்று கேட்கிறார்கள். ஆனால் பவுல் அம்மதங்களைக் கற்று அவற்றில் மேலான அறிவு பெற்றிருந்ததாக வேதம் போதிக்கவில்லை. பவுல் அந்நகரத்தில் போகிற வழியில் கண்டதை வைத்தே பிரசங்கம் செய்தான் என்று வேதம் கூறுகிறது. திருமறையில் அக்கறை செலுத்தி, அதைப் போதிக்காமல் மற்ற மதங்களின் பெருமைகளை ஆராய்ந்து கொண் டிருப்பவர்களின் அடிப்படை பிரச்சனையே அவர்களுக்கு திருமறையின் அதிகாரத்திலும் கிறிஸ்தவத்திலும் நம்பிக்கையில்லாததுதான். நற்செய்தியை மற்றவர்களைப் பாதிக்காதவிதத்திலும், அவர்கள் மனம் புண்படாதவிதத்திலும் எடுத்துச் சொல்ல வேண்டுமானால் மற்ற மதங்களில் நமக்கு அறிவு வேண்டும் என்பது இவர்கள் வாதம். மற்றவர்கள் மனம் புண்படாதவகையில் நற்செய்திப் பிரசங்கம் அமைய வேண்டுமானால் அதைப் பிரசங்கிக்காமல் இருப்பதே நல்லது. ஏனெனில் நற்செய்தி கேட்பவர்களின் இருதயத்தைப் பிளப்பதற்காகவே கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை மாற்ற முயல்வது கர்த்தருக்குப் பொறுக்காத செயலாகும். மற்ற மதங்களின் பெருமையை ஆராய்ந்து கொண்டிருப் பவர்கள் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்து சிந்தித்துப் பார்ப்பது நல்லது. ஏனெனில் 'லிபரல்' கொள்கைகளைப் பின்பற்ற இதுவே முதற்படி.


> **மற்ற மதங்களின் பெருமைகளை ஆராய்ந்து கொண்டிருப்பவர்கள் தங்கள் கிறிஸ்தவ விசுவாசத்தைக் குறித்து சிந்தித்துப் பார்ப்பது நல்லது. ஏனெனில் 'லிபரல்' கொள்கைகளைப் பின்பற்ற இதுவே முதற்படி.**

தத்துவக் கலந்துரையாடலின் (Dialogue) அவசியத்தை வற்புறுத்துபவர்கள் 'லிபரல்' கொள்கையாளர்கள் அல்லது அதன் வழியில் காலடி வைத்திருப்பவர்கள். மாற்று மதத்தாரின் மனத்தைப் புண்படுத்தாது, அவர்களை சரிசமமாகப் பாவித்து, அவர்களுடைய மதத்திலும் சிறப்பம்சங்கள் உண்டு என்ற பரந்த மனப்பான்மையோடு அவற்றை ஏற்று, அவர்களுடன் கலந்துரையாடி கிறிஸ்தவத்தின் பெருமைகளையும் விளக்க வேண்டும் என்பதே தத்துவக் கலந்துரையாடலில் ஈடுபடுபவர்களின் போதனை. ஆனால் திருமறையின் அதிகாரத்தின் அடிப்படையில் மட்டும்தான் நமக்கு எவருடனும் சரிசமனான பேச்சுவார்த்தையோ, ஐக்கியமோ இருக்க முடியும்.

சமயங்களுக்கிடையில் 'சமயசமரசக் கலவையை' (Syncretism) வற்புறுத்தும் தயானந்தன் பிரான்ஸிஸ் 'இன்றைய சமுதாய அமைப்பில் சைவர்களோடும் பிற சமயத்தவரோடும் இந்நாட்டில் கிறிஸ்தவர்கள் உரையாடல்களில் ஈடுபடுவதற்கு இறைவன் அமைத்துத் தந்துள்ள தளமாகவே சமரசப் பொதுக் கொள்கை கருதப் பெறுதல் வேண்டும்' என்று எழுதுகிறார். எந்தளவுக்கு தமிழ்க் கிறிஸ்தவர்கள், சபைகள் மத்தியில் இன்று சமய சமரசம் (Ecumanism) பரவியுள்ளது என்பதற்கு இது ஒரு சான்று. இதன் பாதிப்புக்குள்ளாகாத கிறிஸ்தவ சபைகளையும், நிறுவனங்களையும் இன்று காண்பதும் அறிது. ஆகவே இவற்றை நாம் அடியோடு கைவிட்டு, மனித விடுதலைக்காக கர்த்தர் அளித்துள்ள ஒரே வழியான நற்செய்திப் போதகத்தை மட்டுமே நம்பி நடத்தல் அவசியம்.

*வாசகர்களின் கேள்விகளுக்கு நேரடியாகவோ அல்லது அவற்றில் தெரிவு செய்யப்பட்டவற்றிற்கு ஏனையோர் பயன்கருதி இப்பகுதி மூலமோ பதிலளிக்கப்படும். கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:*

**The Bible Lamp**
**P O Box 62-159**
**Sylvia Park**
**Auckland**
**New Zealand**



. . . எண்ணங்கள் . . . எண்ணங்கள் . . . எண்ணங்கள் . . .

## இசைவழி ஊழியம்

தீபத்தின் கேள்வி - பதில் பகுதியில் வெளியாகியிருந்த 'வில்லுப்பாட்டு மூலம் கர்த்தரின் செய்தியை சொல்வது தவறா? என்ற கேள்விக்கு தாங்கள் அளித்துள்ள பதில் என்னை வெகுவாய்க் கவர்ந்துள்ளது. எல்லோருக்கும் விளங்கக் கூடிய வகையில் வேத வசனங்களுக்கூடாக அழகாக பதில் அளித்துள்ளீர்கள். ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்ட பிரசங்கமே கர்த்தரின் ஆசீர்வாதத்தோடு கேட்போர் இருதயத்தைப் பிளந்து அவர்களை தேவனிடம் கொண்டு வரக்கூடிய சாதனம் என்பது நூற்றுக்கு நூறு உண்மை. உங்கள் பதில் அநேக கிறிஸ்தவர்களுக்கு ஆசீர்வாதமாக இருந்திருக்கும் என்று நம்புகிறேன்.

*திருமதி இரத்தினம் விக்டர், ஸ்ரீ லங்கா*

ஏப்பிரல் - ஜூன் இதழில் இசைவழி ஊழியம் பற்றி எழுதியிருந்தீர்கள். அந்தச் செய்தி மூலம் ஆண்டவர் எங்கள் சபை விசுவாசிகளின் உள்ளத்தில் வெகுவாய் பேசினார். திருமறைத்தீபத்தைத் தவறாது தொடர்ந்து அனுப்பி வைப்பதற்கைாக நானும் எனது சபையாரும் தங்களுக்கு நன்றி கூறுகிறோம்.

*செ. இன்பராஜ், மேலப்புதூர், தமிழ்நாடு*

## சிரிக்கக்கூடிய காரியமா?

ஏப்பிரல் - ஜூன் மாத பத்திரிகை எனக்குக் கிடைத்தது. மிகவும் அருமையாக இருந்தது. அதில் 'சிரிக்கக்கூடிய காரியமா? எனும் தலைப்பில் 'டோரான்டோ ஆசீர்வாதம்' பற்றிய பகுதியில் 'இத்தகைய செயல்களைப் புற மதங்களில்தான் பார்க்க முடியும். சாத்தானின் கைங்கரியத்தால் சாமி வந்து ஆடும் நிலை கர்த்தரின் குழந்தைக்கு ஒரு நாளும் வராது' என்று எழுதியிருந்தீர்கள். நானும் கர்த்தரின் குழந்தை என்று அறிந்து சந்தோசப்படுகிறேன். பத்திரிகையைத் தொடர்ந்து எனக்கு அனுப்பி வையுங்கள்.

*செந்தில்குமார், கோவை, தமிழ்நாடு*

## இறைவனடி சேர்ந்தார்

இப்பத்திரிகை ஊழியத்தில் அதிக அக்கறையோடு பங்கு கொண்டு ஜெபத்தோடு தன்னால் முடிந்த உதவிகள் செய்து வந்த எமது அருமை நண்பர் யான் வென்ட்டோர்ப் தனது 67 ஆம் வயதில் கடந்த ஏப்பிரல் மாதம் 16 ம் திகதி இறையடி சேர்ந்தார். கான்சர் வியாதியால் பல மாதங்கள் பாதிக்கப்பட்டிருந்த அவருக்கு தேவன் இவ்வுலக வாழ்வில் இருந்து விடுதலை தந்தார். சீர்திருத்த கிறிஸ்தவ இலக்கிய வளர்ச்சியில் அதிக ஆர்வம் கொண்டு, தன் வாழ் நாள் முழுவதும் அதற்காகத் தன்னால் இயன்றளவு உழைத்தவர். பெரும் பெருமைகளை எதிர் பார்க்காது பின்னால் இருந்து பலரையும் ஊக்கப்படுத்தியவர். இறையடி சேர்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு வியாதியின் கொடுமையை சகித்துக் கொண்டு பத்திரிகையை முகவரியிட்டு, தபால் தலையிட்டு அனுப்பும் பணியில் ஊக்கத்தோடு ஈடுபட்டவர். அவரது அன்பூழியம் எம்மை இவ்வூழியத்தில் தொடர்ந்து ஊக்கப்படுத்த இறைவன் இயேசுவிடம் மன்றாடுவோம். விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை நிறைவேற்றி இறைவனடி சேர்ந்து விட்ட அருமை நண்பரின் நினைவு எம்மோடு எப்போதுமிருக்கும்.





## திருமறையா? திராவிட சமயமா?

**(28 பக்கங்கள்)**

கிறிஸ்தவத்திலிருந்துதான் ஆதித்திராவிட சமயங்கள் தோன்றின என்ற தவறான போதனையைப் பரப்பி வருபவர்களின் வாதங்களை, (முக்கியமாக 'விவிலியம், திருக்குறள், சைவ சித்தாந்தம் ஒப்பாய்வு' என்ற நூலை) திருமறையின் அடிப்படையில் ஆராய்கிறது இந்நூல்.

இந்நூலை இதுவரை பெற்றுக் கொள்ளாதவர்களுக்கு இலவசமாக அனுப்பத் தீர்மானித்துள்ளோம். சரியான முகவரியுடன் நேரடியாக எழுபவர்களுக்கு இந்நூல் இலவசமாக அனுப்பி வைக்கப்படும்.